Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 20 ஞாயிற்றுக்கிழமை (05.07.2015) பக்கங்கள் 20 ஓசை - 278

R.R.R Advertising

K.K.S வீதி இணுவில் எனும் முகவரியில் இயங்கிவந்த கிளை தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை தெரிவிக்கின்றோம். 0785226818 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

## கஞ்சாவுடன் சென்ற இளைஞர்கள் மீது சூடு

### தாவடியில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கஞ்சா பொதிகளுடன் சென்ற இளைஞர்களை வழிமறித்த போது அவர்கள் நிற்காமல் சென்றவேளை பொலிஸார் அவர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

யாழ். தாவடிப் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் சென்று கொண்டிருந்த வேளை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் அவர்களை வழிமறித்துள்ளனர். இதன்போது

19 ஆம் பக்கம் பார்க்க

## கடற்படை வசமிருந்த 40 ஏக்கர் காணி விடுவிப்பு



(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கீரிமலை நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சுமார் முப்பத்தைந்து முதல் நாற்பது ஏக்கர் வரையான காணி மக்களின் மீள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப் பட்டுள்ளது.

கீரிமலை மாவிட்டபுரம் வீதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

# தொகுதிப் பங்கீட்டில் குழப்பம் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை ஒத்திவைத்தது கூட்டமைப்பு

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளுக்கு ஆசனங்களை பகிர்வது தொடர்பாக இணக்கமின்மை ஏற்பட்ட நிலையில் நேற்றைய தினம் நடைபெறவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மீண்டும் பிற்போடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தொகுதிப் பங்கீடுகள் தொடர்பில் இறுதி முடிவெடுப்பதற்காக இந்த கூட்டம் நேற்றைய தினம் வவுனியாவில் நடைபெறவிருந்தது.



எனினும் இந்தக் கூட்டம் நாளை திங்கட்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாளைய தினம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த கூட்டமைப்பின் மாகாண சபை மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டத்தை அடுத்ததாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் போது தொகுதிப் பங்கீடு தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என்று நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக கட்சிகளுக்கு ஆசனங்களை ஒதுக்குவதில் பல்வேறு முரண்பாடுகள் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கூட்டமைப்பிலுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.தே.க.வில் இணைந்தார் சு.க. பொருளாளர் நாவின்ன



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளரும் கட்சியின் மூத்த உறுப்பினருமான அமைச்சர் எஸ்.பி.நாவின்ன ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட மகிந்த ராஜபக்ஷவிற்கு இடமளிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே

19 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரி - மகிந்த ஒற்றுமை தனிப்பட்ட நலன் சார்ந்ததே

### அதிருப்தியில் ஜே.வி.பி.

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கிடையிலான ஒற்றுமை என்பது அவர்களது தனிப்பட்ட நலன் சார்ந்தது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்கப்பட்டதன் மூலம் அதிகார பேராசை அரசியல் மற்றும் இழிநிலை அரசியல் கலாசாரம் மீளவும் ஒன்றிணைந்து செயற்படுவது புலனாகியுள்ளது என ஜே.



வி.பி.யின் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ 5.8 மில்லியன் வாக்காளர்களுக்கு துரோகம

19 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலை மாணவனை கடத்தியோர் பிடிபட்டனர்

### மாணவனும் மீட்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் தரம் 11 மாணவனை ஆட்டோவில் கடத்த முற்பட்ட இளைஞர்கள் மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த குறித்த பாடசாலை மாணவனின் சகோதரியின் கணவன் மற்றும் அவரது நண்பர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர் நேற்று முன்தினம் பாடசாலை முடிவடைந்த பின்னர் நண்பர்களுடன் பற்றிக்ஸ் வீதி வழியாக வந்து கொண்டிருந்தார். அந்த வீதியில் ஆட்டோவில் நின்ற 3 இளை

19 ஆம் பக்கம் பார்க்க

## 62 இலட்சம் பேரின் தீர்மானத்தை மீறமாட்டார் ஜனாதிபதி

### பிரதியமைச்சர் ஹர்ஷ நம்பிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 62 இலட்சம் மக்களின் தீர்மானத்தை மீற மாட்டார் என பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நேற்று தெரிவித்துள்ளார்.

ராஜகிரிய, ஒபேசேகரபுர பிரதேசத்தில் இடம்பெற்ற மக்களைத் தெளிவூட்டும்

19 ஆம் பக்கம் பார்க்க

### - சுழிபுரம் இரட்டை கொலை வழக்கு -

## குற்றம்சாட்டப்பட்ட எண்மருக்கும் விடுதலை

(திருநெல்வேலி)

சுழிபுரம் இரட்டைக் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த எட்டு எதிரிகளும் நேற்று யாழ். மேல்நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

வழக்கு விசாரணை முடிவில் தீர்ப்பு வழங்கிய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியும், முன்னாள் யாழ். மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதியுமாகிய அன்னலிங்கம் பிறேமசங்கர் குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து எதிரிகளை விடுதலை செய்தார்.

2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8 ஆம் திகதி சுழிபுரம் மத்தியில் இராசன் ரசீதரன் (வயது - 20) மற்றும் அவரது தாய் இராசன் விமலா (வயது - 44) ஆகியோரைக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த நவரத்தினம் நாகேந்திரம், நடராசா சுதந்திரன், கந்தசாமி வல்லிகாந்தன், சிவக்கொழுந்து சிவநாதன், சின்னப்பொடியன்

19 ஆம் பக்கம் பார்க்க

# 41 ஆயிரம் குடும்பங்கள் கிளி.இல் மீள்குடியமர்வு

## மாவட்ட செயலகம் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரையில் 41ஆயிரத்து 613 குடும்பங்களைச் சேர்ந்த 1 இலட்சத்து 36 ஆயிரத்து 961பேர் மீளக் குடியேறியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்தகால யுத்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் கடந்த 2009ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மக்கள் பெருமளவுக்கு மீள்குடியேறி யுள்ளனர்.

இதேவேளை பச்சிலைப் பள்ளி (பளை) பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள முகமாலைப் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் என 807 குடும்பங்கள் மீள்குடியேற வேண்டிய நிலை காணப்படுவதாகவும் மாவட்ட செயலகப்புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரவிப்பாஞ்சான் பகுதியிலும் இதுவரை மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படாது இக்காணிகள் இராணுவம் வசம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# றமழான் சிந்தனை

சினனப பளளி



நோன்பின் கடைசி பத்து நாட்கள் வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் இரவில் விழித்திருப்பார்கள். தன் குடும்பத்தாரையும் விழுந்திருக்க செய்வார்கள்.

(புகாரி-2026)

ஸஹர் முடிவு : அதிகாலை 4.20
நோன்பு திறக்கும் நேரம் : மாலை 6.37

(105)

# தொழில்நுட்பக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அக்கடமி, தொழில்நுட்ப பாடசாலை மற்றும் யாழ்.சென்ஜோண்ஸ் கல்லூரி ஆகியன இணைந்து தொழில்நுட்பக்கண்காட்சி யொன்றை சென்.ஜோண்ஸ் கல்லூரியில் இன்று தொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடாத்தவுள்ளன.

சுமார் 60 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட இலங்கையின் முதலாவது பாடசாலைமட்ட நான்கு மாடித் தொழில்நுட்பக் கட்டடத்தொகுதி இதுவாகும். இக்கண்காட்சியில் மின்சாதன மற்றும் இலத்திரனியல் பொருட்களையும் பலகாரப்பொருட்கள், பூங்கன்று, மரங்கள் பாவனைக்குரிய புகைப்படங்கள், சித்திரங்கள் மற்றும் சிற்றூண்டி வகைகள் போன்றவற்றையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

உயர்தர வகுப்பு மற்றும் இடைவிலகிய மாணவர்கள் இத்தொழில்நுட்ப பூங்காவின் மூலம் பெரும் பயனை அடைய முடியும். பல்வேறு நிறுவனங்கள் இக்கண்காட்சிக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளன.

இக்கண்காட்சியில் அரச அதிபர், வடமாகாண கல்வி அமைச்சர், கல்விப்பணிப்பாளர், ஆயர்கள், மதகுருமார்கள் உள்ளிட்ட பலர் பங்குபற்றவுள்ளனர்.

# தேர்தல் கடமையில் ஈடுபடுவோர் விண்ணப்பங்களை அனுப்ப கோரிக்கை

நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தலுக்காக பாடசாலைகளில் கடமையில் ஈடுபடும் அலுவலர்கள் தமக்கான தேர்தல் விண்ணப்பங்களை பூரணப்படுத்தி மிக விரைவாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ் விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி விரைவாக அனுப்பி வைக்க வேண்டுமென யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தனபாலசிங்கம் அகிலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

# விபத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அடையாளம் காட்டவும்



மன்னார் மடுவில் இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் உயிரிழந்த பெண்ணொருவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி மடுவில் இரு ஆட்டோக்கள் மோதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் இதில் பயணித்த 3 பேர் உயிரிழந்தனர். எனினும் இதில் பயணித்த லீலாவதி லீலாரட்ணம் என்ற பெண்மணி படுகாயமடைந்து முருங்கன் வைத்தியசாலையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

மெலிந்த உடல் கொண்ட 65 வயது மதிக்கத்தக்க 4 அடி அங்குலம் உயரமுள்ள தலையில் நரை ஏற்பட்டுள்ள வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து முருங்கன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ள போதிலும் இப்பெண் அடையாளம் காணப்படவில்லை.

எனவே இப்பெண் பற்றிய விபரங்களை தெரிந்தவர்கள் வைத்திய சாலையில் சடலத்தை அடையாளம் காட்டமுடியும் என திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் தெரிவித்தார். (இ)

# அம்புலன்ஸ் சாரதியால் நோயாளர்கள் பாதிப்பு

நெடுங்கேணி வைத்திய சர்லையின் நோயாளர் காவு வண்டியின் சாரதி வைத்தியசாலையில் நிற்பதில்லை.

இவர் கடமை நேரங்களில் நெடுஙகேணி பேருந்து நிலையத்திலும தனது சொந்த தேவைகளிலும் ஈடுபடுவதாகவும் அவசர நோயாளிகள் வைத்திய சாலைக்கு வரும்போது இவர் வைத்தியசாலையில் கடமையில் இருப்பதில்லை இதனால் அவசர நோயாளிகள் தாமதிக்கப்பட்டு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பவேண்டி உள்ளது!

நோயாளி தாமதப்படுவதனால் ஆபத்தான நிலைக்கும் தள்ளப்படுகின்றார். இவருடைய கடமை 24 மணி நேரமும் வைத்தியசாலையில் நற்கவேண்டிய நிலையில் வைத்தியசாலையின் வைத்தியரின் அணைவோடு இவர் இப்படியான செயல்களில் ஈடுபட்டுவருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு இதற்கான தீர்வினைப் பெற்றுத்தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# கொக்குவில் விபத்தில் நீர்கொழும்பு வாசி மரணம்

கொக்குவிலில் இடம்பெற்ற விபத்தில் நீர்கொழும்பு வாசியொருவர் படுகாயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி காலை கொக்குவிலில் இடம்பெற்ற விபத்தில் நீர்கொழும்பைச் சேர்ந்த தர்மலிங்கம் வேலாயுதன் (வயது69) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கொக்குவிலில் உள்ள மகளின வீட்டிற்கு வந்தவேளை யிலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் இவரை மோதிய வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)


# அல்குர்ஆன் போட்டியின் பரிசளிப்பு விழா

றம்ழான் புனித 'அல்குர்ஆன்' போட்டியின் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ் கதீஜா மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் மௌலவி இம்.எஸ்.ஏ.எம்.முபாறக் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.உலமா சபைத் தலைவர் எம்.ஏ.அஸிஷ், மௌலவியும், சிறப்பு விருந்தினராக கதீயாக்கல்லூரி அதிபர் செல்வி ஏ.சி.யான்சி. ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் வ.மகேந்திரராசா, கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை அதிபர் ந.ந்தகுமார், இ.சிற்றி கம்பஸ் கே.ரஜீவன், யாழ்.மாநகர சபை கலாசார உத்தியோகத்தர் மௌலவி எஸ்.ஏ.ஸி.ரொஷாந் ஆகியோருடன் யாழ்.பள்ளிவாசல்களின் உலமாக்களும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.


இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தினராக எழுத்தாளர்களான வை.சுகுந்தன், நஸ்டியா அஜித், கலாபூஷணம் எம்.எல்.லாபிர் அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பால் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது உலமாக்கள் கௌரவிப்பும், அஹதிய்யா ஆசிரியர்களுக்கான சீருடை, பாடத்திட்டம் வழங்கலும், கிப்ழ்மத் ரஸா மாணவ, மாணவிகளுக்கான புலமைப்பரிசில் நிதி வழங்கலும் பாடசாலை நூலகங்களுக்கான புனித அல்குர் ஆன் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (105)





மு.அநாதரட்சகனின் (இராசநாயகம்) சமூகவெளி நூல் வெளியீட்டு விழா நேற்றுக்காலை யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் எழுத்தளார் தெணியான் தலைமையில் நடைபெற்ற போது ஓய்வுநிலை அதிபர் ப.செல்லத்துரை முதல்பிரதியை பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (105)



# தமிழ் கூட்டமைப்பின் தலைவர்களது தமிழீழ அரசியலின் உள்ளடக்கம்

சாலையூரான்

குறிப்பாக 70களின் பிற்பகுதியில் இருந்து சிங்கள தேசத்திலிருந்து தமிழர்களை வேறுபடுத்திக் கொள்வதன் மூலம் தனித்தமிழீழத்தை தமிழ் மக்களிடம் திணிப்பது தமிழரசுக் கட்சியின் வாக்குவங்கியை நிலைநிறுத்திக் கொள்வதற்கான ஒரு பிரதான உத்தியாக இருந்து வந்திருக்கிறது.

இதில் தமிழரசுக் கட்சிக்கு இரண்டு பிரதான உள்நோக்கங்கள் தொழிற்பட்டிருக்கின்றன.

ஒன்று 70க்கு முன்னரான காலப்பகுதியில் தமிழ்ச் சூழலில் சமூக ரீதியில் வெளிக்கிளம்பிய உட்பூசல்களை மட்டுப்படுத்திக்கொள்வது.

மற்றையது, தமிழச் சூழலில் முரண்படும் பல்வேறு அணிகளதும் தலைமைத்துவமாக தம்மை மாற்றிக்கொண்டு அவர்களுக்கிடையிலான பிணக்குகளை தணித்து தமது அரசியலை தொடர்வது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக தமிழர்களை சிங்கள மக்களுக்கெதிராக முன்நிறுத்தும் ஒரு அரசியல் வழிமுறையை தவிர வேறு மார்க்கங்கள் தமிழரசுக் கட்சிக்கு அப்போது மட்டுமன்றி இப்போதும் இருப்பதாக தெரியவில்லை.

இந்தவகை அரசியலை தொடர்வதற்கு இனத்துவ நிலைப்பட்டு தமிழ் மக்களுக்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வை சிங்கள தலைமைகள் முன்வைக்காமல் பார்த்துக் கொள்வது எப்போதுமே இந்த தமிழ் தலைமைகளின் பிரதான நோக்கமாக இருந்து வந்திருக்கிறது.

இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக தீர்வை நோக்கிய பேச்சுக்களின்போது சிங்கள தலைமைகள் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்வுகளை முன்வைப்பது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒரு பிரதான வழிமுறையாகும்.

யுத்தத்துக்கு முன்னரும் அதன் பின்னரும் தமிழரசுக்கட்சி முன்வைத்த மாவட்ட சபைகள், மாகாண அதிகாரங்களுக்கான பேச்சுக்கள் கூட அப்போதிருந்த சூழலில் அன்றைய சிங்களத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த முடியாத சூழலுக்குள் அவர்களை தள்ளியே அவை முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

இதனை அப்போதிருந்த குறிப்பான நிலைமைகளிலிருந்து அவதானிப்போமாயின் அதனை சுலபமாக புரிந்து கொள்ள முடியும்.

இதன்பிறகு யுத்தம் ஆரம்பித்த சூழலில் இடம்பெற்ற உயிர் உடைமை இழப்புக்களையும் இடப்பெயர்வு வாழ்க்கையையும் தனிநாட்டுக் கோரிக்கைக்காக பயன்படுத்திக்கொள்வது தமிழரசுக் கட்சியினருக்கு ஒன்றும் சிரமமான காரியமாக இருந்திருக்கவில்லை.

புலிகள் தமிழீழம் தவிர்ந்த குறைந்த பட்ச தீர்வுகளுக்காக சிங்கள தலைமைகளுடன் தவறுதலாகவேனும் இணங்கிப் போய்விடக் கூடாதென்பதில் இந்த தமிழ் தலைமைகள் குறியாக இருந்ததையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

புலிகள் இடைக்காலத் தீர்வொன்றுக்கு செல்வதன் மூலம் தமிழர்களின் அரசியல் தலைமையாக புலிகள் மாறி விடாமல் பார்த்துக் கொள்வது ஒன்று.

மற்றையது, தீர்வுகளை நிராகரிப்பதன் மூலம் தொடர்ந்து போராடிக்கொண்டு புலிகள் தங்களை தாங்களே அழித்துக்கொள்ளும் வழிமுறைக்குள் அவர்களை தள்ளிவிடுவது.

இதன்பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் ஈ.பி.டி.பி தன்னை அரசியல் ரீதியாக வலுப்படுத்திக்கொள்வதை தடுக்கும் நோக்கில் தமிழ் கூட்டமைப்பினரை பயன்படுத்த புலிகள் சிந்திக்காதவரை இந்த தமிழ் தலைவர்கள் எந்த அளவுக்கு தரக்குறைவாக புலிகளால் நடாத்தப்பட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

புலிகளின் அனுமதியுடன் தமிழ் கூட்டமைப்பினர் நாடாளுமன்றம் சென்ற போதும் புலிகளை மீறி எந்த ஒரு பேச்சும் செயலுமின்றி எதற்கும் புலிகளின் அனுமதியை எதிர்பார்த்திருந்தமை பரகசியமானது.

வெளிச்சக்திகளுடன் இரகசியமாக புலிகளின் பலத்தை மட்டுப்படுத்துவது பற்றிய பேச்சுக்களில் இவர்கள் ஈடுபட்டதை அக்கட்சியை ஆதரிப்பவர்களில் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

நிற்க, யுத்தம் முடிவடைந்த 2009 இற்கு பிந்திய சூழல்களில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் ,தமிழ் கூட்டமைப்பினர் தமது வாக்கு வேட்டைக்கு வசதியாக இறுதிப்போர் அவலங்களையும் போர்க்குற்ற விசாரணைகளையும் தொடர்புபடுத்தி சர்வதேசத்தை முன்நிறுத்தியமையானது தமிழ் சிங்கள மக்களிடையே பிரிவினையை மேலும் தீவிரப்படுத்தும் ஒரு தந்திரோபாயமாகும்.

தமிழ் கூட்டமைப்பினால் தமிழீழம் பெற்றுத்தருவது சாத்தியமில்லை என்பது தமிழ் சூழலில் உறுதிப்படுத்தப்பட்டபின் வெளிச்சக்திகளை தொடர்புபடுத்தி தமிழீழம் சாத்தியமாகும் என்கிற நம்பிக்கையை தமிழ் மக்களுக்கு கொடுக்க தமிழ் கூட்டமைப்பினர் மேற்கொண்ட முயற்சிகளை அவர்களது தேர்தல்கால பிரசாரங்கள் நிரூபிக்கின்றன.

அதன் பிறகு நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களில் உங்கள் வாக்கையே சர்வதேசம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்கிற தொடர் ஏமாற்றை நம்ப வைத்து தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்துக் கொண்டதை வாக்களித்த மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

பின்வந்த காலங்களில் வடக்கின் தமிழ் சூழலில் உட்கட்டுமானம் மற்றும் அபிவிருத்திகள் வலுப்பெற்ற நிலையில் பிரிவினைக்கான எந்த ஒரு சிறு வெகுஜன எழுச்சிகளையும் ஏற்படுத்தி வாக்குளை அபகரிக்க முடியாத நிலைமைக்கு தமிழ் கூட்டமைப்பினர் தள்ளப்பட்டார்கள்.

இவ்வாறானதொரு சூழலில் நடைபெற்ற வடமாகாண சபை தேர்தலில் விக்னேஸ்வரன் உட்பட சில புதுமுகங்களை முன்நிறுத்தி, வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது, மறைந்த புலிப்போராளிகளை நினைவுகூருவது உட்பட இராணுவத்துக்கு தன்மானப் பிரச்சினைகளை உருவாக்கும் பிரசாரங்கள் மூலம் தமிழ் கூட்டமைப்பினர் வாக்குகளை அபகரித்துக் கொண்டதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.


இப்போது மீண்டும் பொதுத்தேர்தல் வந்திருக்கிறது.

மத்தியில் அதிகாரத்தில் இருப்பவர்களுடன் ஒரு இணக்கத்தை வைத்துக்கொண்டால்தான் ஈ.பி.டி.பி.யை துணிச்சலுடன் எதிர்கொள்ள முடியும் என்கிற புதிய தந்திரோபாயத்தை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

எனவே மத்தியில் ஏதாவதொரு கட்சியின் பின்புலத்துடனேயே இம்முறை அவர்களது தேர்தல் நடவடிக்கைகள் அமைந்திருக்கும் என நாம் எதிர்பார்க்கலாம்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பதினேழாயிரம் வீடுகள்

## கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 17 ஆயிரத்து 344 வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தின் தேவைகள் குறித்து கருத்து வெளியிடுகையிலே அவர் இந்தவிடயத்தைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

475 வீடுகள் திருத்த வேண்டிய நிலையில் காணப்படுவதுடன் 6 ஆயிரத்து 756 குடும்பங்களுக்கு நிரந்தர கழிப்பறைகளும் 475 கழிப்பறைகள் திருத்திக்கொடுக்க வேண்டிய நிலையிலும் உள்ளன எனக்குறிப்பிட்டதோடு இதனைவிட 226 புதிய பொதுக்கிணறுகள் அமைக்க வேண்டியும் 32 பொதுக்கிணறுகள் திருத்த வேண்டியும் உள்ளதாகவும் 8 ஆயிரத்து 475 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்க வேண்டியுள்ளதாகவும் மாவட்ட அரச அதிபர் இதன்போது மேலும் குறிப்பிட்டார்.

# முல்லையில் வெடிகுண்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தண்ணீரூற்று மேற்கு முள்ளியவளையினைச் சேர்ந்த கே.செல்வராணியின் வீட்டையண்டிய பகுதியில் ஆர்.பி.ஜி செல்லொன்று வெடித்துள்ளது.

குப்பைகள் எரிக்கப்பட்ட வேளையிலேயே அதனுள் இருந்த செல்வெடித்துள்ளதாகவும், இவ் அனர்த்தத்தில் எவருக்கும் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை எனவும் முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நூல்கள் வெளியீடு

பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறிஸ்கந்தராசாவின் நான்கு புத்தகங்களுக்கான வெளியீட்டு விழா கொழும்பு யாழ்ப்பாணம் என இரு இடங்களிலும் நடைபெறவுள்ளன.

"இனிக்காதா இலக்கணம்", "ஆங்கிலம் மூலம் தமிழ்", ஆங்கிலம் பிறந்த கதையும் வளர்ந்த கதையும்", பேசாதவை பேசியவை" (கவிதை நூல்) ஆகிய நான்கு நூல்களுமே வெளியிடப்படவுள்ளன.

யாழ்.நாவலர் மண்டபத்தில் இன்று பிற்பகல் 03 மணிக்கு பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையிலும், எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 05 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தலைமையிலும் இவ்விழாக்கள் இடம்பெறவுள்ளன.

உங்கள் நம்பிக்கையை பணத்தின் மீது வைக்காதீர்கள். ஆனால் பணத்தை நம்பிக்கையான இடத்தில் வையுங்கள். -பெர்னாட்ஷா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான. வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வருங்காலம் மாறட்டும்!

தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு வரை தெற்கில் மும்முனைப் போட்டியே இருக்கும் என்று எண்ணியிருந்த நிலை மாறி, இருமுனைப் போட்டிதான் என்கிற சடுதியான மாற்றம் உருவாகியிருக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்தவைத் தவிர்த்துப் போட்டியிடும் என்ற நிலை இருந்தபோது, ஒப்பீட்டளவில் அதுவே இனவாதம் குறைந்த தரப்பாக பார்க்கப்பட்டது.

இப்போது பழையபடி எதிரெதிராக உள்ள இருதரப்புமே இனவாதத்தைத் தூக்கிப் பிடிப்பவையாக அமைந்துவிட்டன. ஒட்டுமொத்த நாட்டுக்கு இது துரதிர்ஷ்டமான நிலைமைதான்.

ஏனெனில், அடுத்து ஆட்சிக்கு வரப்போகிறவர்களுடன் தமிழ்த் தரப்பும் ஏட்டிக்குப் போட்டியாக இந்த நாட்டில் இனவாதப் போக்கை மேலும் வளர்த்தெடுத்துச் செல்லும் விதத்தில் நிலைமைகளைப் பாழ்படுத்தவே செய்யும் என்பதை இப்போதே ஊகிக்கலாம்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், "ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனப்பிரச்சினையில் சாதகமான போக்கைக் கொண்டிருக்கிறார்; தேர்தலின் பின்னரும் அவரே ஜனாதிபதியாக இருப்பார் என்பதால், தீர்வைப் பெற்றுக் கொள்வோம்" என்றே தேர்தல் வாக்குறுதியைத் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் ரணிலுக்கோ மகிந்தவுக்கோ தான் பெரும்பான்மை இருக்கப் போகிறது என்கிற இன்றைய மாற்றச் சூழ்நிலையில், மைத்திரியிடம் தீர்வைப் பெற்றுக் கொள்வோம் என்பதெல்லாம் கூட்டமைப்பே நம்ப முடியாத சங்கதி என்பது தெளிவு.

மகிந்த வந்தால் கூட்டமைப்பினர் இனவாத எதிர்ப்பரசியலைத் தீவிரப்படுத்தி தீர்வுப் பேச்சைக் கைவிடுவார்கள்; ரணில் வந்தால் தங்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெறும் இணக்க அரசியலைச் செய்துகொண்டு தீர்வுப் பேச்சைக் கிடப்பில் போடுவார்கள் என்பது தெரிந்ததே.

தெற்கு நிலைமை இப்படியென்றால், வடக்கில் இம்முறை பலமுனைப் போட்டி நிலவும் என்றே தெரிகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியே போட்டியிடுவதாக அறிவித்து வேட்பாளர்கள் பெயர்களையும் வெளியிட்டு வருகிறது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இம்முறை தனித்துப் போட்டியிடும் என்று தெரிகிறது. ஐக்கிய தேசியக் கட்சியில் முன்னாள் பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும் இத்தேர்தலில் போட்டியிடுகிறார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெற்குக் கூட்டில் இம்முறை போட்டியிடாது என்று தெரிகிறது. மேற்சொன்ன மூன்று கட்சிகளையும் தவிர்ந்த இதர தமிழ்க் கட்சிகளை இணைத்து இன்னொரு தமிழ்க் கூட்டமைப்பாகவோ அல்லது தனித்தோதான் போட்டியிடும் என்று பேசப்படுகிறது.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இன்னொரு தரப்பாக வடக்கு தேர்தல் களத்தில் இருக்கிறது.

இந்த ஐந்து கட்சிகளையும் தவிர, ஆறாவதாக ஒரு கட்சியும் இந்தத் தேர்தலுக்கு உதயமாகியிருக்கிறது. முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இணைந்து ஜனநாயகப் போராளிகள் கட்சியை அமைத்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு தேர்தல் மாவட்டங்களில் த.தே.கூ தனது வேட்பாளர் பட்டியலில் தலா இரண்டு போராளிகளையாவது இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். இல்லாவிட்டால், தனித்தோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இணைந்தோ அவர்களும் போட்டியிடக் கூடும் என்றே தெரிகிறது.

மொத்தத்தில், தமிழ்மக்கள் பலகட்சி ஜனநாயக முறையினை மதித்து இந்தத் தேர்தலை எதிர்கொள்வதானது எதிர்காலம் குறித்த நம்பிக்கையை அளிக்கக் கூடிய விஷயம் என்பதில்

# மகிந்தவுடன் மைத்திரியை

# அனுராதபுரத்தில் மேடையேற்ற முயற்சி

(கொழும்பு)

மகிந்தவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்கு மைத திரியையும் மேடையேற்றுவதற்கு மகிந்த ஆதரவு அணி தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில பிரேம ஜயந்தும் இதில் கலநது கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன, டளஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவனச ஆகியோரும் இதில் கலந்து கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் அனுமதி வழங்கப்பட்டமைக்கு நன்றி தெரிவிக்கவும், அவரை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இங்கு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், எதிர்வரும் 9 ஆம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறவுள்ள மகிந்தவைப் பிரதமராக்கும் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கலந்துகொள்ளச் செய்ய முயற்சி எடுக்கவேண்டும் எனவும் இங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நாற்பது வீத சம்பள உயர்வு

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளம் 40 வீதத்தினால் உயர்த்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்திற்கு ஏற்கனவே அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், சம்பள ஆணைக் குழுவின் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த ஆவணங்கள் திறைசேரிக்கு அனுப்பிவைக கப்பட்டுள்ளன.

தேர்தலின் பின்னர் ஆட்சி அமைக்கும் அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சம்பளங்களை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸார் 12 மணித்தியாலம் கடமையாற்றி வருகின்றனர். கடந்த எந்தவொரு அரசாங்கமும் வழங்காத அளவிற்கு சம்பளங்களை உயர்த்த இந்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

22 ஆண்டுகள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் சுய விருப்பில் ஓய்வு பெற்றுக்கொள்ள முடியும இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. ஏற்கனவே 7ஆயிரம் பேர் ஓய்வு பெற்றுக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் எவ்வித தலையீடும் இன்றி பதவி உயர்வு, இடமாற்றம் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜோன் அமரதுங்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மிகவும் குறைந்தளவில் காணப்படுவதனால் சம்பள ஆணைக் குழு உள்ளிட்ட தரப்பின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டீ.எம். கே.பி.தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர்வு வடிவத்தில் புலிகளின் போராட்டம்

## என்கிறார் பீரிஸ்

விடுதலைப் புலிகளின் போராட்டம் தற்போது புலம்பெயர் அமைப்புகள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு - நாரஹேண்பிட்டி அபயராமயவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பும் தேசிய பொருளாதாரம் தற்போது கேள்விக்குறியாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டிருந்தாலும் அவர்களது போராட்ட வடிவம் மாறியுள்ளது எனக் குறிப்பிட்ட அவர், அவர்கள் ஆயுதங்களைக் கொண்டு போரிடவில்லை என்றும், மாறாக புலம்பெயர் அமைப்புக்களூடாக தங்கள் போராட்ட வடிவங்களை மாற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# மைத்திரியின் முடிவால் கட்சிக்குள் கடும் அதிருப்தி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதியளித்ததை ஏற்றுக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அதிருப்தியடைந்துள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறு அதிருப்திக்குள்ளான 15 இற்கும் மேற்பட்ட உறுபபினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அடுத்தடுத்த பேச்சுக்களில் ஈடுபடவும் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சில் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முடியாது எனத் தெரிவிக்கும்பட்சத்தில் குறித்த உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதியளித்ததாக நேற்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திடம் இருந்து விலகிச் சென்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கை தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# இராஜதந்திரிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான தூதுவர்களாக நியமிக்கப்படவுள்ள இராஜதந்திரிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.


புதிய அரசாங்கத்தினால், வெளிநாடுகளுக்கு நியமிக்கப்படவுள்ள 33 தூதுவர்களையும் ஜனாதிபதி நேற்று முன்தினம் சந்தித்தார்.

எதிர்பார்ப்புகள் மற்றும் கொள்கைகள் குறித்து இதன் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விபரித்துக் கூறியுள்ளார்.

# எத்தனை காலந்தான் ஏமாறுவது இவர்களிடம்?

■ சங்கர சிவன்

**வழமை போல் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனத்திலேயே கூட்டமைப்பு முழுக் கவனமும் செலுத்துகின்றது. எத்தனையோ ஆலோசனைக் கூட்டங்கள் நடந்துவிட்டன. ஒரு கூட்டத்திலாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வை முன்வைக்கலாம் என்பது பற்றி இவர்கள் பேசவில்லை. இப்போது மாத்திரமல்ல, கடந்த ஆறு வருட காலத்தில் ஒரு தடவையாவது தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி இவர்கள் பேசவில்லை.**




வழமை போல் பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனத்திலேயே கூட்டமைப்பு முழுக் கவனமும் செலுத்துகின்றது. எத்தனையோ ஆலோசனைக் கூட்டங்கள் நடந்துவிட்டன. ஒரு கூட்டத்திலாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வை முன்வைக்கலாம் என்பது பற்றி இவர்கள் பேசவில்லை. இப்போது மாத்திரமல்ல, கடந்த ஆறு வருட காலத்தில் ஒரு தடவையாவது தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி இவர்கள் பேசவில்லை.

இந்த லட்சணத்தில் நடக்கப்போகும் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தமிழ் மக்கள் ஒன்றுபட்டுப் பலத்தைக் காட்டுவதன் மூலம் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்கள். முக்கியத்துவம் வாய்ந்த் தேர்தல் என்பது கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன கதை. ஒவ்வொரு தேர்தலின் போதும் இதைத் தான் சொன்னார்கள். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அப்படி என்ன முக்கியத்துவம் இந்தத் தேர்தலீல் இருக்கின்றது? ஆட்சி அமைக்கும் போட்டியில் ஈடுபட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இனப் பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கைத் திட்டமொன்றைத் தேர்தலின் போது முன்வைப்பதாக இருந்தால் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் என்று சொல்லலாம். அப்படி எதுவும் நடக்கப்போவதாக இல்லை. அல்லது கூட்டமைப்பு இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துத் தமிழ் மக்களின் அங்கீகாரத்தை அதற்குப் பெறப்போகின்றதென்றால் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் என்று சொல்லலாம். அப்படியான நோக்கம் எதுவும் கூட்டமைப்புக்கு இல்லை. இதுவரை ஏமாறியது போதும் என்ற நிலைப்பாட்டைத் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் மேற்கொள்வார்களேயானால் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் எனக் கூறலாம். இது பற்றிப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

ஒன்றுபட்டுப் பலத்தைக் காட்டுவதன் மூலம் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் எல்லாத் தேர்தல்களிலும் தான் சொல்கின்றார்கள். கடந்த தேர்தல்களில் மக்கள் ஒன்றுபட்டு இவர்களை ஆதரித்தார்கள். யாருக்குப் பலத்தைக் காட்டிக் காரியம் சாதித்தார்கள்? யாரோடு பேரம் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றார்கள்? எதுவும் நடக்கவில்லை. இனப் பிரச்சினையும் மற்றைய பிரச்சினைகளும் வளர்ந்து சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்தார்களேயொழிய அவற்றின் தீர்வுக்காக ஒரு துரும்பைக் கூட அசைக்கவில்லை.

கூட்டமைப்பு இதுவரை காலமும் செய்ததெல்லாம் தமிழ் மக்களுக்குப் பொய் சொன்னதும் அவர்களை ஏமாற்றியதும் தான். சர்வதேச சமூகம் தீர்வுடன் தயாராக இருக்கின்றது என்றும் தீர்வைப் பெற்றுத்தரும் என்றும் தொடர்ச்சியாகக் கூறினார்கள். அது சுத்தப் பொய், அப்படியான வளர்ச்சிப் போக்கு எதுவும் சர்வதேச அரங்கில் இருக்கவில்லை. மக்களை ஏமாற்றி வாக்குகளை அள்ளுவதற்காகக் கூட்டமைப்புத் தலைவர்கள் தேர்தல் காலங்களில் இப்படிப் பொய் கூறினார்கள். அவர்கள் கூறியதில் சிறிதளவாவது உண்மை இருந்திருந்தால் சர்வதேச சமூகம் ஏதாவது செயற்பாட்டை மேற்கொண்டிருக்கும். அரசாங்கத்துடன் பேசுங்கள் என்று சர்வதேச சமூகம் இவர்களுக்கு ஆலோசனை வழங்கியதையே அண்மையில் பார்த்தோம்.

இனப் பிரச்சினையின் தீர்வுக்காக முயற்சிப்பதாக இவர்கள் கூறுவதெல்லாம் அப்பட்டமான பொய். இனப் பிரச்சினைக்கான தீர்வு சிங்கள மக்களின் ஆதரவுடனேயே சாத்தியமாக முடியும். பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட ஒரு தீர்வு நடைமுறைக்கு வரவேண்டுமானால் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறவேண்டியது அவசியம். எந்த நிலையிலும் அரசியலமைப்பின் இந்த நிபந்தனையை மீறிச் செல்ல முடியாது. சர்வசன வாக்கெடுப்பு நாடு முழுவதையும் ஒரே தொகுதியாகக் கொண்டு நடாத்தப்படுவதால் சிங்கள மக்களின் ஆதரவுடனேயே அரசியல் தீர்வுக்கு அங்கீகாரம் பெறமுடியும். இந்த யதார்த்தத்தை மக்களுக்கு விளங்கப்படுத்திச் சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கான அணுகுமுறையைப் பின்பற்றுவது தான் அரசியல் தீர்வில் அக்கறையுள்ள தலைமை செய்ய வேண்டியது. கூட்டமைப்புத் தலைவர்கள் இந்த யதார்த்தத்தை தொடர்ச்சியாகத் தமிழ் மக்களிடமிருந்து மறைத்து வருகின்றார்கள். சிங்கள எதிர்ப்பு இனவாத அரசியலில் பெருமளவில் தங்கியிருக்கும் கூட்டமைப்புத் தலைவர்க்ள் இந்த யதார்த்தத்தை மறைப்பதை விளங்கிக் கொள்ளலாம். இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம் என்பது தமிழ் மக்களுக்கு விளங்கினால் இவர்களின் இனவாத அரசியல் எடுபடாமல் போய்விடும். அரசியல் தீர்வுக்கான பிரதான முன்தேவையைப் புறக்கணித்துக் கொண்டு அரசியல் தீர்வைப் பெற்றுத் தரப்போவதாகக் கூறுவது எவ்வளவு பெரிய மோசடி.

மீண்டும் ஒரு பொய்யுடன் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு வந்திருக்கிறார் சம்பந்தன். தேர்தலுக்குப் பின் அமையவுள்ள அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்குமாம். இதுவும் சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்பதைப் போன்ற இன்னொரு புலுடா. மரத்திலிருந்து மாங்காய் பறிப்பது போல அரசியல் தீர்வை அடைய முடியாது. முதலில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும். அதைத் தொடர்ந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும். அதற்குப் பின் சட்டம் நிறைவேற்றப்பட்டுச் சர்வசன வாக்கெடுப்பில் அந்தத் தீர்வு அங்கீகாரம் பெற வேண்டும். புதிய அரசாங்கம் பதவியேற்றதும் இவ்வளவையும் செய்வதற்குச் சாதகமான சூழ்நிலை தென்னிலங்கையில் நிலவும் என்று சம்பந்தன் சொல்கின்றாரா?

ஜனாதிபதி தீர்வுக்குச் சாதகமான நிலைப்பாட்டில் இருப்பதால் தீர்வு நிச்சயம் என்கிறார் சம்பந்தன். இது தமிழ் மக்கள் எல்லோருக்கும் குடுமி கட்டும் கதை. ஜனாதிபதிக்கு அரசியல் தீர்வில் அக்கறை இருந்தாலும் அவர் தன்னிச்சையாகத் தீர்வொன்றை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய நிலையில் இல்லை. ஆட்சி அமைக்கும் கட்சிதான் ஆரம்ப நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஆட்சி அமைக்கக்கூடிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நியாயமான அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்தப் போவதில்லை. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்லப்போவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கின்றார். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மனமிருந்தாலும் அதிக தூரம் செல்ல முடியாதவாறு மகிந்த ராஜபக்ஷவின் பேரினவாதப் பிரசாரம் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது.

கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களுக்குப் பொய் சொல்லி ஏமாற்றியது போதும். சர்வதேச சமூகம் வந்து கொண்டிருக்கின்றது என்றும் புதிய அரசில் தீர்வு என்றும் கூறும் பொய்களைத் தமிழ் மக்கள் எல்லாக் காலங்களிலும் நம்புவார்கள் என்று நினைக்கக் கூடாது.

தமிழ் மக்களின் இப்போதைய தேவை இனப்பிரச்சினையின் தீர்வை நோக்கிய நகர்வு. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் பட்சத்தில் மற்றைய பிரச்சினைகள் ஒன்றன் பின் ஒன்றாக மறையக் கூடியவை. நடைமுறைச் சாத்தியமான தீர்வுத்திட்டத்தை முன்வைத்து அதன் அடிப்படையில் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் ஆகாயத்தில் மாளிகை கட்டுவது போல நடைமுறைச் சாத்தியமற்ற தீர்வு பற்றிப் பேசிக்கொண்டிருப்பதால் அரசியல் தீர்வு வராது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த பிரதேச சுயாட்சி தாம், நியாயமான அரசியல் தீர்வாக முடியும். ஆனால் அது உடனடியாகச் சாத்தியமானதல்ல. எனவே நீண்டகாலத் தீர்வாக அதை வைத்துக்கொண்டு அத் தீர்வை நோக்கி நகர்ந்து செல்லக்கூடியதும் உடனடியாகச் சாத்தியமானதுமான தீர்வுக்காக முயற்சிப்பதே சரியான அணுகுமுறை.


இந்த அணுகுமுறையைப் பின்பற்றுவதற்குக் கூட்டமைப்பு தயாராக இல்லை. அரசியல் தீர்வுக்குச் சாதகமாக எதுவும் செய்யக்கூடாது என்ற புலம்பெயர் அமைப்புக்களின் கட்டளையை மீறக்கூடிய நிலையில் இவர்கள் இல்லை. தமிழ் மக்கள் கூட்டமைப்பை நம்பி இனியும் ஏமாறக்கூடாது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த தீர்வை நீண்டகால இலக்காகக் கொண்டு உடனடிச் சாத்தியமான தீர்வுக்கான வேலைத்திட்டத்தை முன்வைக்கும் தலைமையை நோக்கி மக்கள் திரும்ப வேண்டும். ●

**பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட ஒரு தீர்வு நடைமுறைக்கு வரவேண்டுமானால் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறவேண்டியது அவசியம். எந்த நிலையிலும் அரசியலமைப்பின் இந்த நிபந்தனையை மீறிச் செல்ல முடியாது. சர்வசன வாக்கெடுப்பு நாடு முழுவதையும் ஒரே தொகுதியாகக் கொண்டு நடாத்தப்படுவதால் சிங்கள மக்களின் ஆதரவுடனேயே அரசியல் தீர்வுக்கு அங்கீகாரம் பெறமுடியும். இந்த யதார்த்தத்தை மக்களுக்கு விளங்கப்படுத்திச் சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கான அணுகுமுறையைப் பின்பற்றுவது தான் அரசியல் தீர்வில் அக்கறையுள்ள தலைமை செய்ய வேண்டியது. கூட்டமைப்புத் தலைவர்கள் இந்த யதார்த்தத்தை தொடர்ச்சியாகத் தமிழ் மக்களிடமிருந்து மறைத்து வருகின்றார்கள். இனப்பிரச்சினையின் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம் என்பது தமிழ் மக்களுக்கு விளங்கினால் இவர்களின் இனவாத அரசியல் எடுபடாமல் போய்விடும். அரசியல் தீர்வுக்கான பிரதான முன்தேவையைப் புறக்கணித்துக் கொண்டு அரசியல் தீர்வைப் பெற்றுத் தரப்போவதாகக் கூறுவது எவ்வளவு பெரிய மோசடி.**

**தெற்கு அரசியலில் திருப்பம்**

# அடுத்த நகர்வு என்ன? இரவிரவாக மந்திராலோசனை

## தனிவழி போவது சரியா





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான தரப்பினர் மாற்று வழி குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் மகிந்தவின் எதிர்த் தரப்பினர் இவ்வாறு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதில் முக்கியமானவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க திகழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது குறித்து இந்தத் தரப்பு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்கினால் தனித்துப் போட்டியிடுவது என அண்மையில் 36 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்குவதனை சந்திரிக்கா கடுமையாக எதிர்த்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மகிந்த ராஜபக்ஷவிற்கு சுதந்திரக் கட்சி வேட்பு மனு வழங்கினால் தாம் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்வதாக அண்மையில் மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருனிகா பிரேமச்சந்திர தெரிவித்திருந்தார்.

## மைத்திரியை மீட்டு எடுத்துள்ளோம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக் கட்சியின் பிடியிலிருந்து மீட்டுள்ளதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ தலைமையில் மேற்கொள்ளப்பட்ட புரட்சியின் ஊடாக, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது அபயராமயவில் நடைபெற்று வரும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது வரை காலமும் மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய தேசியக் கட்சி சிறை பிடித்து வைத்திருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.நா. மௌனம்

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் 17ஆம் நாள் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது குறித்து கருத்து வெளியிட ஐ.நா. மறுத்துள்ளது.

நியூயோர்க்கில் நடந்த நாளாந்த செய்தியாளர் சந்திப்பில், ஐ.நா. பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம், மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு ஐ.நா. பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர், அது பற்றித் தாம் எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது என்று பதிலளித்துள்ளார்.

## அரசமைப்புப்பேரவையில் சர்ச்சை சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

அரசியல் அமைப்பின 19 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக உருவாக்கப்பட்ட அரசமைப்புப் பேரவையில், சிவில் பிரதிநிதிகளை நியமிப்பது குறித்த சர்ச்சை தொடர்வதால், இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோர அரசமைப்புப் பேரவை நேற்றுமுன்தினம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், அடுத்ததாக எதிர்வரும் 9ஆம் திகதி கூடுவதற்கும் முடிவெடுத்துள்ளது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அரசமைப்புப் பேரவையின் முதலாவது கூட்டம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேறறு முன்தினம் இடம்பெற்றது. இந்த முதலாவது கூட்டத்தில் பேரவையின் உறுப்பினர்களான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, முன்னாள் எம்.பிக்களான ஜோன் செனவிரட்ன, இரா.சம்பந்தன் ஆகிய ஆறு பேர் பங்கேற்றுள்ளனர்.

பேரவையின் மற்றுமொரு உறுப்பினரான அமைச்சர் சம்பிக்க இதில் கலந்து கொள்ளவில்லை. 19 ஆவது திருத்தச் சட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி 214 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதில் அரசமைப்புப் பேரவையொன்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 10 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தப் பேரவையில் 7 அரசியல்வாதிகளையும், 3 சிவில் பிரதிநிதிகளையும் நியமிக்க அரசியல் கட்சிகளிடையே இணக்கம் ஏற்பட்டது.

இருப்பினும், கடந்த ஒரு மாதத்திற்கும் அதிக காலமாக சிவில் பிரதிநிதிகளை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இந்நிலையில், அரசமைப்புப் பேரவையின் முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் சிவில் பிரதிநிதிகள் மூவரை நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், இது விடயத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக பேரவையின் பிரதிநிதியான நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், அடுத்த கட்டமாக எதிர்வரும் 9 ஆம் திகதி கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டதாகவும தெரிவித்தார்.

## மக்களின் ஆணையை மதிப்போம்



(கொழும்பு)


கடந்த ஜனாதிபதித் தேர்தலில மக்கள் வழங்கிய ஆணையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துஷ பிரயோகம் செய்வதற்கு ஜாதிக ஹெல உறுமய முற்படாது என்று அந்த கட்சியின் பொது செயலாளரும் அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கும் நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கும் தமது கட்சி முக்கிய பங்கு வகித்ததுடன் தமது கட்சிக்கென்று ஒரு கொள்கை இருப்பதாகவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தமது கட்சி மீது நம்பிக்கை கொண்டு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தம்முடன் ஒன்றிணைந்திருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமது கட்சி மீது நம்பிக்கை வைத்த பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் தமது கட்சி முன்னிலை வகித்ததாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான பாட்டளி சம்பிகக ரணவக்க தெரிவித்துள்ளார்.



## ரணிலை வீட்டுக்கு அனுப்புவோம்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சிறுபான்மை அரசை ஓகஸ்ட் 17 ஆம் திகதி தோற்கடிப்போம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின்ர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு, நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வேட்புமனு வழங்குவது என்ற முடிவு எடுககப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் [illegible]

## மைத்திரி மீதான கொலை முயற்சி

### சூத்திரதாரிக்கு கடூழிய சிறை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அவரை கொலை செய்வதற்கு முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை மேல்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில இந்த வழக்கு, நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே நீதிபதி [illegible]

அத்துடன் 10 ஆயிரம் ரூபாய தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளதுடன், தண்டப்பணத்தை செலுத்த தவறின் மேலதிகமாக ஒருவருடம் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மொஹமது சுல்தான் காதர் மொஹிடீன் ஏ.கே.ஏ. சேனன் என றழைக்கப்படும் சிவராஜ் ஜெனிவன் என்பவருக்கே இவ்வாறு கடூழிய சிறைத் தண்டனை விதிக [illegible]

கிளைமோர் குண்டை வைதது இந்தக் கொலை முயற்சியை மேற கொண்டதாக அவர மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

பொலன்னறுவையிலிருந்து மட்டக்களப்புக்கு 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் திகதியன்று பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த போதே பொலிஸார் இவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியரின் பயிர்ச்செய்கை முயற்சி வடமாகாண சபை முட்டுக்கட்டை



(வவுனியா)

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு கிராம சேவகர்பிரிவில் மூங்கில் செய்கையினை இந்திய வர்த்தகர் ஒருவரினால் இப்பயிற் செய்கையினை ஆரம்பித்து வைப்பதற்கு முன் வந்த வேளையில் வடமாகாண விவசாய அமைச்சினால் இதனை தடுத்து நிறுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப் பயிர்ச்செய்கை தொடர்பாக அக்கிராம மக்கள் விருப்பம தெரிவித்த நிலையிலும் இந்தியா வர்த்தகரினால் இதற்கான நாற்று, இதற்கான பாராமரிப்புச் செலவு அனைத்தையும் வர்த்தக உரிமையாளரினால் வழங்கி ஒரு ஏக்கருக்கு வருடத்தில் ஏழரை இட்சம் இலாபம் இப் பயிர்ச்செய்கையிலிருந்து கிடைக்கும் என எதிர்பார்த்திருக்கும் நிலையில்

இக் கிராம மக்கள் 1984 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தின் யுத்தம் காரணமாக இப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த நிலையில் இக் காணிகளை துப்பரவு செய்வதிலும் இவ் உரிமையாளர்களுக்கு நிதியில்லை. இவ்விடயம் தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர சிவசக்தியானந்தன் முறையிட்ட போதிலும அவர் நேரில் வந்து இவ்விடங்களை பார்வையிட்டுள்ளார். இதனால சிங்களக்குடியேற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இதனை தற்போது இந்தியா வர்த்தகரின் உதவியுடன் இக் காணிகள் துப்பரவு செய்யும் வாய்ப்பினை ஏற்படும வகையில் இத் திட்டம் அமைந்துள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் முன்னிலையில் ஒப்பந்தம் செய்வதற்கு மக்கள் விருப்பம் தெரிவித்த போதிலும் இச் செயற்றிட்டத்தினை வடமாகாண விவசாய அமைச்சினால் இச் செய்ய விடாது தடுத்து நிறுத்தும் முயற்சியினை தொடர்சசியாக அழுத்தத்தினை ஏற்படுத்திய நிலையில் கிளர்ந்து எழுந்த இப்பிரதேச மக்கள் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து பிரதேச செயலாளருக்கும் இவ் விடயம் தொடர்பாக மக்களினால் தங்கள் கஸ்ட நிலையினை தெளிவுபடுத்திய நிலையில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வன் அடைக்கலநாதன் நேரில் வந்து கிராம மக்களின் பிரசினைகளை நேரில் விசாரித்து இச் செய்கைக்கு தானும் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்தார். (40)

# இரண்டாம் தவணை பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை நடைபெறுமென கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் பாடசாலை அதிபர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சைக்கான நேரசூசிகளும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை நேரசூசிக்கமைய தரம் 10, 11 வகுப்புக்களிற்கான பரீட்சைகள் எதிர்வரும் 13 ஆம் திகதியும், தரம் 06,07,08,09 ஆகிய வகுப்புக்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதியும், ஆரம்ப வகுப்புக்களுக்கான பரீட்சைகள் 20 ஆம் திகதியும் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுவுள்ளதால் வினாத்தாள் பொதிகளை தயார் செய்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு பாடசாலையினையும் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் விபரங்களையும் அதற்கான விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி அனுப்பி வைக்குமாறும் அதிபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (03)

# யானை இறப்பு

(வவுனியா)

நெடுங்கேணி ஒலுமடு வேலடி வயல் வெளிப்பகுதியில் வயல் ஓரமாக இறந்த நிலையில் யானையின் சடலம் காணப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக நெடுங்கேணி பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்று அவர்களினால் வவுனியா வன விலங்கு அதிகாரிக்கு தெரியப்படுத்திய நிலையில் அவர்கள் நேரில் வந்து யானை இறந்ததற்கான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆஞ்சநேயப் பெருமானின் திருத்தல யாத்திரை

திருத்தல யாத்திரை மேற்கொண்டு பவனிவரும் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் இன்று சுன்னாகம் கந்தரோடைப்பகுதி ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு வருகை தரவுள்ளார்.

இதனையொட்டி இன்று காலை 7 மணிக்கு விசேட அபிஷேகமும் பூசைகளும் நடைபெற்று ஆன்மீகச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. ச.பரமேஸ்வரக் குருக்களின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன சிவாச்சாரியார் கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் விசேட விருந்தினராக லண்டன் தான்தோன்றி ஆஞ்சநேயர் சித்த பீடாதிபதி, ஆத்ம சிரஞ்சீவி, ஆஞ்சநேயர் மைந்தன், ஆஞ்சநேயர் அருள்சித்தர், பரமசிவராஜா சுவாமிகள் கலந்து கொண்டு அருளாசி வழங்குவதுடன் பிரதம விருந்தினராக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரி சுவாமிகள் கலந்து கொண்டு ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றவுள்ளதுடன திருகோணமலை பாலையூற்று நாக கன்னிபீடம் சிவயோகினி நாகவரலட்சுமி அம்மா கௌரவ விருந்தினராகவும் வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் மா.வேதநாதன், த.கைலாசநாதன், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், வைத்திய கலாநிதி புவனேந்திர நாதன், அதிபர் வ.நந்தீஸவரன், சைவப்புலவர் ச. நித்தியதசீதரன் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றவுள்ளனர்.

இந் நிகழ்வின் இறுதியில் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (இ)

# விளையாட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பிரதேச செயலக பிரிவுகளுக்கிடையில் நடாத்தப்படும் வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப பணிப்பாளர் எஸ்.எம். ராஜா ரணசிங்க கலந்து கொள்ள உள்ளார். (90)

# பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பம் கோரல்

பிரதி பொதுமுகாமையாளர், முகாமையாளர் மற்றும் நிதி முகாமை யாளர் தரம் I பதவிகளுக்கான விண்ணப்பங்களினை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை கோரியுள்ளது.

நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி ஆகிய துறைகளில் மேற்குறித்த பதவிகளிற்கே அதிகார சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

வெளி விண்ணப்பதாரிகளுக்கும் அவ்வாறே உள்ளக விண்ணப்பதாரிகளுக்குமென தனித்தனியாக தகமைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த அதிகார சபையில் மூன்று பதவிகளுக்காக நிலவும் வெற்றிடங்களுக்கான அடிப்படைத் தகைமைகளாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் நிர்வாகம், கணக்கியல், நிதி முகாமைத்துவம் ஆகிய பட்டப்பின் படிப்பிற்கான பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முனனர் தலைவர் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல 758 பேஸ்லைன் வீதி, கொழும்பு - 9 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொட்டப்படும் குப்பைகளால் குருநகரில் அபாயம்

(குருநகர்)

குருநகர் பகுதிகளில் காணப்படும் வடிகால்கள் உரிய முறையில் துப்புரவு செய்யப்படாமையால் கழிவு நீர் தேங்கி நின்று துரநாற்றம் வீசி வருகிறது. வாரத்தில் ஓரிரு தினங்கள் மட்டும வந்து குப்பைகளை அகற்றிச் செல்லும் ஊழியர்கள் அதில் கிடக்கும் மண் சேறுகளை அகற்றுவதில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அது தவிர வாரங்களில் ஒரு நாள் குப்பைகளை எடுக்கும் வாகனங்கள் வந்து செல்வதும் சில வேளைகளில் ஸ்தம்பிதம் அடைவதால் வீதிகளில் குப்பைகள் காணப்படுகின்றன.

வீதிகளில் குப்பை போடுபவர்களிடம் 1000 ரூபா தண்டப் பணம் வசூலிக்கப்படும் என்னும் அறிவித்தல் ஊடகங்கள் ஊடாக தெரிவிக்கப்பட்டிருந்தும் இரவு வேளைகளில் பொது இடங்களில் குப்பைகளை போட்டுச் செல்லும் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (68)

# வீட்டில் திருட்டு

கிளி.இத்தாவில் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீடொன்றில் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டைச் சேர்ந்தோர் பளை நகரில் உள்ள ஆலயமொன்றுக்கு சென்றிருந்த வேளையிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் 10 பவுண் நகை 70,000 ரூபா பணம் என்பன திருடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில முறையிடப் பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (37)

# கரவெட்டி பிரதேச செயலக இலக்கிய விழா பெறுபேறுகள் - 2015

(யாழ்ப்பாணம்)

பிரதேச மட்ட இலக்கிய விழாவினை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கலை இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு

**பாலர் பிரிவு**

**கவிதை பாடல்**

முதலாமிடம் சு.தேவதிவான் யா/மாணிக்கவாசகர் வித்தியாலம், இரண்டாமிடம் க.பரணிகா யா/மாணிக்கவாசகர் வித்தியாலம், மூன்றாமிடம் வி.நந்திகா யா/மாணிக்கவாசகர் வித்தியாலம்

**கையெழுத்துப்போட்டி**

முதலாமிடம் கு.தட்சாயினி யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை, இரண்டாமிடம் நா.சுபஹரி யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் சு.வர்ஷனா யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை

**கனிஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

முதலாமிடம் இ.ஷாத்விகா யா /உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் ஸ்ரீ.ஜஸ்மிகா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் ர.மிருத்திகா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**கட்டுரைப்போட்டி**

முதலாமிடம் சி.கஜலக்ஷன் யா/விக்கினேஸ்வராக் கல்லூரி, இரண்டாமிடம் யோ.சயந்தன் யா/விக்கினேஸ்வராக் கல்லூரி, மூன்றாமிடம் ர.சாருஜா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**கவிதைப் பாடல்**

முதலாமிடம் தி.வைஷ்ணவி யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் பே.விநதியா யா /வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் ர.விதுர்ஷனன் யா/விக்கினேஸ்வராக் கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு**

**கவிதை போட்டி**

முதலாமிடம் ச.மீனலோசினி யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் கௌ.தமிழ்நிலா யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் ஜெ.விதுர்ஷா யா/விக்கினேஸ்வராக் கல்லூரி

**கட்டுரைப் போட்டி**

முதலாமிடம் ச.மதுசாளினி யா /வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் தரங்கினி யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மூன்றாமிடம் சி.தேவிகா யா/நெல்லியடி மத்திய கல்லூரி

(தொடரும்)

# வர்த்தகர் மீது தாக்குதல்

புலோப்பளை பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு வர்த்தகர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

மேற்படி நபர் இரவு 8.30 மணியளவில் தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டுச் சென்ற வேளை கொள்ளைக்காக, பளைப் பகுதியில் பிரபல பாடசாலை ஒன்றில கல்வி பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்களினாலே, அவர் தாக்கப்பட்டதாகவும், இது தொடர்பாக பளைப் பொலிஸார் சந்தேக நபரகளைக் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளதுடன், அது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலுக்குள்ளான நபர் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக சாவகச்சேரி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் (37)

## பெண்கள் உலகக் கிண்ணக் கால்பந்து இறுதிக்கு முன்னேறியது நடப்பு சம்பியன்



(எட்மான்டன்)

பெண்களுக்கான உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு இரண்டாவது முறையாக ஜப்பான் அணி முன்னேறியுள்ளது. நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் ஜப்பான், அமெரிக்க அணிகள் மோதவுள்ளன.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் பெண்களுக்கான 7ஆவது உலகக் கிண்ணக் கால்பந்துத் தொடர் கனடாவில் நடைபெற்று வருகின்றது.இதில் நேற்று முன்தினம் இரண்டாவது அரையிறுதிப் போட்டி எட்மான்டன் நகரில் நடைபெற்றது. இதில் நடப்பு சம்பியன் ஜப்பான், இங்கிலாந்து அணிகள் மோதின.

ஆட்டத்தின் 33ஆவது .நிமிடத்தில் ஜப்பான் அணிக்கு கிடைத்த பெனால்டி கிக் வாய்ப்பில் கப்டன் அயா மியாமா முதல் கோல் அடித்தார். இதற்கு, 40ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கிக் மூலம் இங்கிலாந்தின் பரா வில்லியம்ஸ் பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவு 1-1 என சமநிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் போராடிய இரு அணி வீராங்கனைகளால் கூடுதலாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. மேலதிகமான நேரத்தில் (90ஆவது நிமிடத்தில்) ஜப்பானின் கோல் எல்லைக்குள் வந்த பந்தை இங்கிலாந்தின் லாரா பாஸ்செட் வெளியே அடிக்க முயன்றார். ஆனால் பந்து, கோல் காப்பாளர் கரண் பார்ட்ஸ்லே தலைக்கு மேலே சென்று சேம் சைட் கோலாக மாற இங்கிலாந்து வீராங்கனைகள் அதிர்ச்சி அடைந்தனர்.

ஆட்டநேர முடிவில் ஜப்பான் அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக (2011, 2015) இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. கடந்த 2011இல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஜப்பான் அணி தண்ட உதை மூலம் அமெரிக்காவை வீழ்த்தி முதன்முறையாக கிண்ணத்தை வென்றது.

வான்கூவரில் நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் ஜப்பான், அமெரிக்க அணிகள் மோதவுள்ளன. கடந்த 2011இல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இவ்விரு அணிகளும்மோதின. இதில் ஜப்பான் வென்றது. இன்று நடைபெறவுள்ள 3ஆவது இடத்துக்கான போட்டியில், அரையிறுதியில் தோல்வி கண்ட இங்கிலாந்து, ஜேர்மனி அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வித்தகியே; இது உனக்கான காலம்



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) இங்கிலாந்தைச் சேர்ந்த வொதர் வொட்சனை எதிர்கொண்டார்.

இதில் செரீனா வில்லியம்ஸ் 6-2, 4-6, 7-5 என்ற செட் கணக்கில் போராடி வென்று 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார். செரீனா 4ஆவது சுற்றில் தனது சகோதரி வீனஸ் வில்லியம்ஸைச் சந்திக்கிறார். வீனஸ் வில்லியம்ஸ் 3ஆவது சுற்றில் 6-3, 6-2 என்ற கணக்கில் அலெக்சான்ட்ரா குருனிகனை (சேர்பியா) வீழ்த்தினார்.

மற்ற ஆட்டங்களில் ஷரபோவா (ரஷ்யா), சபரோவா (செக்குடியரசு) அசரென்கா (பெல்ஜியம்) ஆகியோர் வென்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்கள். நடப்பு சம்பியனும் முதல் நிலை வீரருமான ஜோகோவிச் (சேர்பியா) 6-3, 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் டொமினிக்கை (அவுஸ்ரேலியா) வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு நுழைந்தார். வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து), டெவிட் கொபின் (பெல்ஜியம்) ஆகியோரும் வென்றனர்.

## கண்மணியே காதல் வலையில் சிக்கிக்கொண்டாயோ?





ரென்னிஸ் களத்தில் தனது ஆட்டத்தால் மட்டுமின்றி, அழகாலும் கவர்பவர் அனா இவானோவிக். முன்னாள் முதல் நிலை நாயகியான இவானோவிக் தற்போது உலக தரவரிசையில் 6ஆவது இடம் வகிக்கின்றார்.

அழகு மங்கை இவானோவிக், ஜேர்மன் கால்பந்து வீரர் ஸ்கீவன்ஸ்டீகரை காதலிப்பதாக ஒரு பரபரப்புத் தகவல், விளையாட்டு உலகத்தில் உலா வருகிறது. இவர்கள் இருவரும் அப்படி நெருக்கமாகப் பழகி வருகிறார்கள்.

இவானோவிக்- ஸ்கீவன்ஸ்டீகர் இடையேயான நட்பு (?) மிகவும் ஆழமாக உள்ளது. இருவரும் பல இடங்களுக்கு ஒன்றாகச் சென்று வருகின்றனர்.

ஸ்கீவன்ஸ்டீகருடனான பழக்கம் குறித்து இவானோவிக் கூறுகையில், "நான் தற்போது ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கியது போல உணர்கிறேன். முன்பெல்லாம் ரென்னிஸ் தவிர மற்ற விடயங்களுக்கு எனக்கு நேரம் இருக்காது. தற்போது போட்டி இல்லாத நேரங்களில் "நண்பருடன்' கடற்கரையில் உலா போகிறேன், ஷொப்பிங் செல்கிறேன்.

ஸ்கீவன்ஸ்டீகருடனான பழக்கம், வெளியே செல்வதெல்லாம் ஆரம்பத்தில் எனக்குக் கொஞ்சம் தயக்கத்தை ஏற்படுத்தின, குற்ற உணர்ச்சியாகவும் உணர்ந்தேன். ஆனால் தற்போது, எனக்குள் ஒரு நல்ல மாற்றம் ஏற்பட்டிருப்பதை அறிகிறேன் என்கிறார் இவானோவிக்.

## எங்கும் இருப்பாய் நீ நெருப்பாய்



(லண்டன்)

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உள்ளூர் ருவென்ரி-20 போட்டியில் விளாசிய நியூசிலாந்து அணி கப்டன் மக்கலம் 64 பந்தில் 158 ஓட்டங்கள் எடுத்து புதிய சாதனை படைத்தார்.

இங்கிலாந்தில், உள்ளூர் கவுண்டி அணிகள் பங்கேற்கும் நொட்வெஸ்ட் ருவென்ரி-20 பிளாஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது. பர்மிங்காமில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் வார்விக்சயர், டெர்பிஷயர் அணிகள் மோதின.

முதலில் ஆடிய வார்விக்சயர் அணிக்கு கப்டன் வருண் சோப்ரா (51) நல்ல ஆரம்பத்தைக்கொடுத்தார். மறுமுனையில் அதிரடி காட்டிய மற்றொரு ஆரம்பம் துடுப்பாட்ட வீரர் மக்கலம், சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். டெர்பிஷயர் பந்துவீச்சை வெளுத்துவாங்கிய இவர் 42 பந்தில் சதத்தை எட்டினார். அபார ஆட்டத்தை தொடர்ந்த இவர் 64 பந்தில் 158 ஓட்டங்கள் (11 சிக்சர்கள், 13 பவுண்டரிகள்) எடுத்து ஆட்டமிழக்காதிருந்தார். வார்விக்சயர் அணி 20 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைக் குவித்தது.

கடின இலக்கை விரட்டிய டெர்பிஷயர் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்ககளைப் பெற்று 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. கப்டன் டர்ஸ்டன் (43), ரூதர்போர்ட் (39) ஆறுதல் தந்தனர்.

இதன்மூலம் நாட்வெஸ்ட் தொடரில், ஒரு இனிங்ஸில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்து புதிய சாதனை படைத்தார் மக்கலம். இதற்கு முன், கடந்த ஆண்டு செம்ஸ்போர்டில் நடைபெற்ற எசக்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சசக்ஸ் அணியின் லுக் ரைட் 66 பந்தில் 153 ஓட்டங்கள் எடுத்தார்.

சாதனைக்காக நான் ஒருபோதும் ஆடியது கிடையாது. எனது இயல்பான ஆட்டம் இது. களத்தில் எவ்வித பயமுமின்றி ஆடுவதால் எதனையும் கருத்தில் கொள்வதில்லை. எவர் பந்து வீசுகின்றார் என்பது குறித்து அலட்டிக் கொள்வதில்லை என சதமடித்த பின் மக்கலம் தெரிவித்துள்ளமை

## வென்றது தென்னாபிரிக்கா

(பதுல்லா)

பங்களாதேஷ் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் தென்னாபிரிக்க அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் சென்றுள்ள தென்னாபிரிக்க அணி 2 ருவென்ரி-20, 3 ஒரு நாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

முதல் ருவென்ரி-20 மிர்பூரில் இன்று நடைபெறவுள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் லெவன், தென்னாபிரிக்க அணிகள் மோதிய ருவென்ரி- 20 பயிற்சிப் போட்டி நேற்று முன்தினம் பதுல்லாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி 18 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இம்ருல் 29, சுவ்கடா 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டேவிட் வைஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சுலப இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணி 12 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டிவில்லியர்ஸ் 25, குயின்ரன் 35, டுமினி ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களைப் பெற்றனர். பங்களாதேஷ்,தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது ருவென்ரி-20 போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூன்றாமிடம் பெருவுக்கு

கோபா அமெரிக்க கால்பந்துத் தொடரின் மூன்றாமிடத்தை பெரு அணி பிடித்துக் கொண்டது.

கோபா அமெரிக்க கோப்பை கால்பந்து போட்டியின் 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் பெரு-பராகுவே அணிகள் நேற்று மோதின.

அரையிறுதியில் பெரு அணி சிலியிடமும், பராகுவே ஆர்ஜென்ரீனாவிடம் தோல்வி அடைந்திருந்தது. நேற்று அதிகாலை நடைபெற்ற இப்போட்டியில் பெரு 2-0 என்ற கோல் கணக்கில் வென்று 3ஆவது இடத்தைப் பிடித்தது.

48ஆவது நிமிடத்தில் கேரில்லோவும், 98ஆவது நிமிடத்தில் குரிரோவும் கோல் அடித்தனர்.

## குடிபோதையில் வாகனம் ஓட்டிய பேல்க்நருக்கு ஒரு நாள் சிறை



(லண்டன்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களில் ஒருவரும் சகலதுறை வீரருமான ஜேம்ஸ் பேல்க்நர், இங்கிலாந்தில் உள்ள உள்ளூர் அணியான லங்காஷையர் கவுண்டி அணிக்காக ருவென்ரி-20 போட்டியில் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில், பேல்க்நர் அங்கு குடிபோதையில் வாகனம் ஓட்டியதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. அவரது இரத்த பரிசோதனையில் மது அருந்தியது கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில் குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக போல்க்நரை மான்செஸ்டர் பொலிஸார் கைது செய்தனர். ஒரு நாள் இரவு முழுக்க சிறையில் அடைக் கப்பட்ட அவர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் அவர் மீதான வழக்கு எதிர்வரும் 21ஆம் திகதி மான்செஸ்டர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. அப்போது அவர் நேரில் ஆஜராக வேண்டும்.

இதனிடையே, அவுஸ்ரேலியா கிரிக்கெட் சபையும் அவர் மீது விசாரணை நடாத்தும் என்றும் கூறப்படுகிறது.

# நிதர்சன் சிறப்பான துடுப்பாட்டம் அரையிறுதியில் யாழ். மத்தி

(யாழ்ப்பாணம்)

நிதர்சனின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாவட்ட பாடசாலை அணிகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டமொன்று கடந்த 30ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இயலரசன் மற்றும் கலைக்ஷன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இருப்பினும் நிசாந் மற்றும் சருஜன் எஸ். சில்வா ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் செயற்பட்டனர். இதன் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி கௌரவமான நிலையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிசாந் 69 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 45, சருஜன் 59 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 45, எஸ். சில்வா 58 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 32, டினுசன் 34 பந்துகளை எதிர்கொண்டு 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இயலரசன் 33 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, கலைக்ஷன் 39 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, நிதர்சன் 32 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 170 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி முதல் விக்கெட்டை விரைவாக இழந்து தடுமாறியது. இந்நிலையில் களம் புகுந்த நிதர்சன் அணியை சரிவிலிருந்து மீண்டார். பொறுப்பாக ஆடிய நிதர்சன் அரைச் சதம் கடந்த அசத்தியதுடன் அணியின் வெற்றியையும் உறுதி செய்தார். இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 31 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது. இதில் நிதர்சன்



66 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக 80, ராஜ்கிளிங்டன் 66 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காது 28, இயலரசன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிமலதாஸ் 30 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இவ்வெற்றியின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மாவட்ட விளையாட்டு விழா

(வவுனியா)

வவுனியா மாவட்ட விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வரும் இப்போட்டி நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. இதில் தடகளப் போட்டிகள் உள்ளிட்ட பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கிண்ணம் வென்றது தம்பாட்டி காந்திஜி



(புங்குடுதீவு)

புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக்கிண்ணத்தை தம்பாட்டி காந்திஜி அணி கைப்பற்றிக் கொண்டது.

புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையமும் நசரேத் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி, கடந்த 30ஆம் திகதி புங்குடுதீவு நசரேத் மைதானத்தில் நடைபெற்றது. இதில் புங்குடுதீவு சண்ஸ்ரார் அணியும் தம்பாட்டி காந்திஜி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக்கொண்டால் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ள இரு அணிகளும் இறுதி வரை போராடின. இருப்பினும் தம்பாட்டி காந்திஜி அணி இறுதி நேரங்களில் சிறப்பாக ஆடி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் உரையாற்றிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன், தீவகத்தின் கல்வியானது கடந்த பல வருடங்களாக பெரும் பின்னடைவை சந்தித்து வந்த நிலையில் தற்பொழுது தீவகம் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் அபிவிருத்தியிலும் மெல்ல மெல்ல மேலெழுந்து வருவதை அனைவரும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

தீவகத்தை பொறுத்த வரையில் பல்வேறு தேவைகளும் குறைபாடுகளும் இருக்கின்றது. அவற்றை தீர்த்து வைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## தொடரை வெல்ல முயற்சிப்போம்

இந்தியாவுக்கு எதிரான தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என சிம்பாப்வே அணி வீரர் சிக்கும்புரா தெரிவித்துள்ளார்.

நட்சத்திர வீரர்கள் இல்லாத இந்திய அணியை நாங்கள் எதிர்கொள்வது குறித்து அதிகம் அலட்சிக்கொள்ளவில்லை.

எங்களைப் பொறுத்து நாங்கள் இந்திய அணியுடன் விளையாடுகின்றோம். அதில் வெற்றிபெறவேண்டும் என்ற உத்தியுடன் செயற்படுவோம். இந்திய அணியில் யார் விளையாடுகின்றார் என்பது பற்றி எல்லாம் நாம் சிந்திப்பதில்லை. போட்டிக் களத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வெல்ல வேண்டும் என்பதே எங்கள் இலக்கு. சொந்த மண்ணில் இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளதால் எங்களுக்கான வெற்றி வாய்ப்பு அதிகம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தோல்வி நிரந்தரமல்ல ஜொலிப்பார் நடால்

(லண்டன்)

தொடர் தோல்விகளால் நடாலின் திறன் குறைந்துவிட்டது என கணக்குப் போடுவது தவறு. அவர் மீண்டெழக்கூடிய சக்தி மிக்க வீரர். விரைவில் மீண்டெழுவர் என சுவிஸ் ரென்னிஸ் வீரர் பெடரர் தெரிவித்துள்ளார்.

பிரேஞ் ஓப்பன், தற்போது நடைபெற்று வரும் விம்பிள்டன் ஓப்பன் போன்ற போட்டிகளில் நடால் விரைவாகவே வெளியேற்றப்பட்டிருக்கின்றது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பெடரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நடாலை நான் பல முறை எதிர்கொண்டிருக்கின்றேன்.

அவர் அற்புதமான வீரர். அவரிடம் நிறைய பாடங்களையும் நான் கற்றிருக்கின்றேன். அவரின் காயங்கள் பூரணமாக குணமடையாததன் காரணமாகவே தோல்விகளை அவர் சந்திக்க நேரிடுகின்றது. கடந்த பல மாதங்களாக போதிய உடற்தகுதி இன்றியே அவர் ஆடி வருகின்றார்.

அவருடைய இந்த தோல்விகள் தற்காலிகமானது. எதிர்காலத்தில் ரென்னிஸில் பல சாதனைகளை அவர் படைப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கிராமப்புற இளைஞர்களை வெளிக்கொணர்வதே இலக்கு

### இலங்கை கால்பந்தாட்ட உப தலைவர் அன்ரனிப்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

இலைமறை காயாக உள்ள கிராமப்புற இளைஞர்களின் திறமையை வெளிக்கொணர்ந்து அவர்களை தேசிய மட்டப் போட்டிகளில் சாதிக்கத் தூண்டுவதே எனது முதல் கட்ட இலக்கு என இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளன உப தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்திற்குப் பின்னர் விளையாட்டின் தரம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. வடமாகாணத்தில் பல கால்பந்து லீக் உருவாக்கப்பட்டிருக்கின்றது.


இதற்கூடாக எங்களது செயற்பாட்டை வீச்சாக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். அதற்கு நீண்ட காலத் திட்டமிடல்கள் ஊடாக கிராமப் புற இளைஞர்களின் திறமையை இனங்காண்டு அவர்களுக்குப் பயிற்சி தொடர்ந்து வழங்குவதன் மூலம் அவர்களின் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும் என்று நம்புகின்றோம்.

வடக்கில் கால்பந்து திறனை வளர்க்க வேண்டும் என்ற பெரு விருப்பு எங்களுக்கு இருப்பது போன்று அதில் விளையாடும் வீரர்களுக்கும் இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் தான் நாங்கள் நினைக்கும் காரியங்களை சிறப்பான முறையில் செயற்படுத்த முடியும்.

தற்போதைய காலத்தில் வீரர்கள் மத்தியில் கால்பந்துப் போட்டிகளில் சாதிக்க வேண்டும் என்ற வெறி அல்லது விருப்பு இருந்தாலும் தொடர் பயிற்சிகளை அவர்கள் அர்ப்பணிப்புடன் மேற்கொள்வதில்லை.

தொடர் பயிற்சிகள் மற்றும் தந்திரங்கள் போன்றவற்றை பயிற்சியாளருக்கு கீழ் படிந்து கற்றுக்கொள்கின்றபொழுதே ஒரு வீரரினால் சிறப்பாக செயற்பட முடியும்.

நாங்கள் பல பயிற்சி முகாம்களை நடாத்தி வருகின்றோம். தொடர்ந்தும் நடாத்தி அதற்கூடாக சிறந்த நிலையை அடைய வழி செய்ய முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# தடுமாறும் மைத்திரி

– உபுல் ஜோசப் பெர்னாண்டோ (சிலோன்ருடே) கட்டுரையிலிருந்து.





1994 இல் பொதுத் தேர்தல் பெறுபேறு அறிவிக்கப்பட்ட போது, சந்திரிகா குமாரதுங்க இரகசிய இடத்தில் மறைந்திருந்தார். இத் தேர்தல் பெறுபேறால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என அவர் கருதினார். இவரது விசுவாசிகள் மாத்திரமே இவர் தங்கியிருந்த இரகசிய இடத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்கப் பட்டனர்.

தேர்தல் பெறுபேறு அறிவிக்கப்பட்ட போது சந்திரிகாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்ததை இவரது விசுவாசிகள் அவதானித்தனர்.

"இத்தேர்தலில் வெற்றிபெறுவதற்காக நாங்கள் பாரியதொரு பரப்புரையை மேற்கொண்டிருந்தோம். ஆனால் 105 ஆசனங்களை மட்டுமே நாங்கள் பெற்றுள்ளோம்" என ஆழ்ந்த மனவேதனையுடன் சந்திரிகா இதனைத் தெரிவித்தார்.

மிகப் பலமான நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதற்கு சந்திரிகாவிற்கு 113 ஆசனங்கள் மட்டுமே தேவைப்பட்டன. இதன் பின்னர் இவர் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் ஆதரவுடன் ஆட்சியமைக்க வேண்டிய நிலையேற்பட்டது.

2001இல், சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க நாடு முழுமையில் பரப்புரை மேற்கொண்டிருந்தார். சந்திரிகா அரசாங்கத்தில் அங்கம் வகித்த முக்கிய சில நபர்களை ரணில் தனது பக்கம் இழுத்திருந்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் எஸ்.பி.திசநாயக்கவும் இதில் ஒருவராவார்.

ஆனால் தேர்தல் பெறுபேறு அறிவிக்கப்பட்ட போது, 109 ஆசனங்களை மட்டுமே ரணில் பெற்றிருந்தார். இந்தச் செய்தி ரணிலுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தனது கட்சி 113 ஆசனங்களை வென்றெடுக்கும் என ரணில் நம்பியிருந்தார். இதனால் அரசாங்கத்தை அமைப்பதற்காக சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் ஆதரவை ரணில் பெற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டது.

2004இல் ரணிலின் அரசாங்கத்தை சந்திரிகா தோற்கடித்து தன்வசமாக்கிக் கொண்டார். இதற்காக சந்திரிகா ஜே.வி.பியின் உதவியை நாடியிருந்தார். இதன் போது ரணில், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என சந்திரிகா பிரச்சாரம் செய்திருந்தார்.

ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் உதவியுடன் ரணிலுக்கு எதிராக சந்திரிகா தேசப்பற்று சார்ந்த பரப்புரையை மேற்கொண்டார்.

சோம தேரரின் பரப்புரையால் சந்திரிகாவினால் ரணிலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தேசப்பற்றுப் பரப்புரையானது சிங்கள பௌத்த பரப்புரையாக மாற்றமுற்றது.

எனினும் இத்தேர்தலில் சந்திரிகா மற்றும் ஜே.வி.பி இணைந்து 105 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர். இதனால் அரசாங்கத்தை அமைப்பதற்கான மீதி ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் உதவியை சந்திரிகா நாடினார்.

சிறிலங்காவின் தேர்தல் வரலாற்றில் இவ்வாறான பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் 113 ஆசனங்களைத் தன்னால் பெற்றுக் கொள்ள முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு கனவு காண முடியும்?

2010இல் ஐ.தே.க 60 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. ஆகவே தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் ஐ.தே.க இன்னமும் 53 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 2010ல் அடைந்ததை விட தற்போது இரண்டு மடங்கு ஆசனங்களைப் பெறுவதற்கான முயற்சிகளை ஐ.தே.க மேற்கொள்ள வேண்டும்.

2010 அதிபர் தேர்லில் மகிந்த ராஜபக்ஷவால் எவ்வாறு 140 தேர்தல் தொகுதிகளில் வெற்றிபெற முடிந்ததெனில் தற்போது 113 ஆசனங்களைப் வென்றெடுக்க எங்களால் முடியாதா என ஐ.தே.க வாதிடக்கூடும்.


எனினும், 2010இல் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் மகிந்தவும் சரத் பொன்சேகாவும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் வித்தியாசம் 1.6 மில்லியன் ஆகும்.

இதற்கும் மேலாக, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை வகிக்கும் மைத்திரி அதிபர் தேர்தலில் போட்டியிடும் போது ஐ.தே.க தனது ஆதரவை வழங்கியிருந்தது.

இந்நிலையில் மைத்திரி இல்லாது ஐ.தே.கவால் தேர்தலில் வெற்றி கொள்ள முடியுமா? இவை பதில்களுக்காகக் காத்திருக்கப்படும் வினாக்களாகும்.

# மைத்திரியின் கோபம்!

– விஸ்வா கட்டுரையிலிருந்து.



பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவதானது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு சற்று ஆறுதலை வழங்கியிருக்கின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கொண்டு வரப்படவிருந்த நம்பிக்கையில்லா தீர்மானம் செயலிழந்ததுடன், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரும் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க மீது கொண்டுவரப்படவிருந்த நம்பிக்கையில்லா தீர்மானமும் செயலிழந்தது.

எனினும் மஹிந்த தேர்தலில் களமிறங்கினால் என்ன நடக்கும் என்கிற அச்சம் ரணில் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு இப்போது அதிகரித்த வண்ணமே உள்ளது என்பதையும் அவதானிக்க முடிகின்றது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தவிற்கு கிடைத்த 58 இலட்சம் வாக்குகள் ஐ.தே.கவினருக்கு அச்சமூட்டும் ஒன்றே.

இது இவ்வாறிருக்க, மஹிந்த இந்த தேர்தலில் வென்று பிரதமரானால் என்ன நடக்கும் என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ரணிலின் கதை முடிந்துவிடும் என்பது வேறு விடயம். எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் "நல்லாட்சி" என்ற அவரது நிகழ்ச்சிநிரலின் படி நாட்டின் நிர்வாகத்தை நடத்துவதற்கு முடியாத நிலையே ஏற்படும்.

மைத்திரிபால சிறிசேன நாட்டில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதில் இருந்து ஆத்திரப்பட்டு வார்த்தைகளை வெளியிட்டது இதுவரை நடைபெற்றதில்லை. சில வாரங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு குழுவினர் மஹிந்த ராஜபக்ஷவை நாட்டின் பிரதமராக்க வேண்டும் எனவும், அதற்கு கட்சி அவருக்கு இடமளிக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்ட போது, மைத்திரி கோபமடைந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

அவருடன் இணைந்து செயற்பட முடியாத் காரணத்தினாலேயே பிரிந்து வந்து இன்று ஜனாதிபதியாகியுள்ளேன். அவர் பிரதமரானால் அவருடன் இணைந்து எவ்வாறு நிர்வாகம் நடத்துவது? என அவர் அப்போது கோபத்துடன் வந்திருந்தவர்களிடம் கேள்வி எழுப்பினார்.

உண்மையில், பகையுணர்வு கொண்டவர்கள் இணைந்து ஒரு நிர்வாகத்தை நடத்த முற்படுவது என்பது மிகவும் சிக்கலானதே. மஹிந்த போட்டியிட்டு பிரதமரானால், ஜனாதிபதியாக இருக்கும் மைத்திரி பாரிய சிரமங்களை எதிர்நோக்கவே நேரும். ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவ்வதிகாரங்கள் பிரதமருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலையில், ஏற்படும் நிர்வாகக் குழப்பங்கள் பொதுமக்களையும் பாதிப்பதாகவே அமையும் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# இங்கிலாந்து அளவு நிலம் அவுஸ்ரேலியாவில் விற்பனைக்கு விலை $320 மில்லியன் மட்டுமே!




உலகில் அதிகபட்ச நிலம் விற்பனைக்கு வந்துள்ளது. அவுஸ்ரேலியாவின் தென் பகுதியில் 11 மில்லியன் (ஒரு கோடி பத்து இலட்சம்) சதுர் கிலோமீற்றர் அளவிலான நிலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த நிலம் தெற்கு அவுஸ்ரேலியா, குயின்ஸ்லாந்து, மேற்கு அவுஸ்ரேலியா, வட பிராந்தியம் (Northern Territory) என்று விரிந்து கிடக்கிறது.

இங்கிலாந்து நாட்டின் நான்கில் மூன்று அளவிலான அந்த நிலத்தில் பண்ணையை பராமரிக்கும் 150 பேர் மட்டுமே வசித்து வருகிறார்கள். அந்த நிலத்தை வாங்க வெளிநாடுகள் உட்பட 30 பேர் போட்டியிடுகின்றனர். சீனா இந்த நிலத்தை வாங்க மும்முரமாக உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலத்தின் சொந்தக்காரர் அடிலைட் நகரில் 1857ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில் பிறந்த சேர் சிட்னி கிட்மேன் ஆவார். தனது 13 வயதில் ஐந்து ஷில்லிங் பணம் மற்றும் ஒற்றைக்கண் குதிரையுடன் வீட்டை விட்டு ஓடி பின்னர் நிலம், பண்ணை என்று வாங்கி பெரும் பணக்காரர் ஆனவர். அவர் துவங்கிய எஸ். கிட்மேன் அன்ட் கம்பெனிக்கு சொந்தமாக ஏராளமான நிலம் உள்ளது. இந்நிலையில் ஐந்து தலைமுறைகளாக கிட்மேன் குடும்பத்திடம் இருந்த அந்த நிலம் தற்போது $320 மில்லியனுக்கு விற்பனைக்கு வந்துள்ளது. நிலத்தை வாங்க விரும்புவோர் நிலத்தை வானிலிருந்து சுற்றிப்பார்க்க சிறு விமானத்தில் குறைந்தது ஒருவாரம் பயணிக்கவேண்டும்.

# வாழ்தல் ஒரு கலை!

பெயரிடப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாகவுள்ள இப்படத்தில் சிவ்ராஜ் குமார் பொலிஸ்

விட்டார். தற்போது தன் சுயசரிதையை எழுத துவங்கியுள்ளார்.


❖ ராகவா லாரன்ஸ் இயக்கி, நடித்து வெ-

பிரச்சனைகளும் இதில் ஒருவராவார்.

பரப்புரையை மேற்கொண்டார்.

வினாக்களாகும்.

# வாழ்தல் ஒரு கலை!



வாழ்வது உண்மையிலேயே ஒரு கலைதான். அதை நீங்கள் கற்றுத்தான் ஆக வேண்டும்.

வளரும் உலகத்தோடு தாங்களும் வளர வேண்டும் என்பதற்காக மக்கள் இன்று என்னென்னவோ கலைகளைக் கற்பதற்காக முண்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் அடிப்படையான வாழும் கலையைப் பற்றி அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் தாங்கள் உயிரோடு இருப்பதையே வாழ்வதாகக் கருதிக் கொண்டிருப்பதுதான்.

உங்கள் வாழ்க்கையே ஒரு திருவிழாவாக மாறவேண்டுமானால், நீங்கள் அதைக் கொண்டாட வேண்டுமானால் அதற்கு ஒரே வழி, "நிகழ்காலத்தில் வாழ்தல்"தான்.

ஒரு ஜென் கதை;

ஒரு குருவிடம் சீடன் ஒருவன் போய்ச் சேர்ந்தான். அந்தக் குரு காட்டிற்குச் சென்று விறகு வெட்டுவதைத் தம் தொழிலாகக் கொண்டிருந்தார்.

ஒருமுறை சீடன், "குருவே! ஞானம் பெறும் முன் தாங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டான்.

"அப்போதும் நான் விறகு வெட்டியாகத்தான் இருந்தேன்!" என்றார் குரு.

சீடனுக்கு ஆச்சரியம்.

"ஞானம் பெறும் முன்பும், பெற்ற பின்பும் விறகு வெட்டியாகவே இருக்கிறாரா?" அப்படியானால் இவருக்கு அந்த ஞானம் எந்த மாறுதலையும் வழங்கவில்லையா?"

சீடன் தன் சந்தேகத்தைக் குருவிடமே கேட்டு விட்டான்.

குரு கூறினார்: "ஞானம் பெறுவதற்கு முன்பும் பின்பும் நான் விறகு வெட்டியாகவே இருந்து கொண்டிருக்கிறேன். என் தொழிலில் மாற்றமில்லை. ஆனால் நான் மாறியிருக்கிறேன். அது புறமாறுதல் அல்ல. அக மாறுதல். முன்பும் நான் காட்டிற்குச் சென்று பட்ட மரங்களை வெட்டிக் கொண்டிருந்தேன். அப்போது அந்த நிகழ்வு இயந்திரத்தனமாக எந்த உயிரோட்டமும் எந்த ஆனந்தமும் இல்லாமல் நிகழ்ந்து கொண்டிருந்தது. இப்போதும் நான் காட்டிற்குச் சென்று பட்ட மரங்களை வெட்டிக் கொண்டிருக்கிறேன். இப்போது எனக்கு இந்தச் செயல் ஒரு கொண்டாட்டமாக ஆனந்தக் கூத்தாகத் தென்படுகிறது. முன்பெல்லாம் காட்டில் பறவைகள் கத்துவதாகத் தோன்றும். இப்போது அந்தப் பட்சிகளின் ஒலி சங்கீதமாக என் காதில் இனிக்கிறது. முன்பு நீரின் வீழ்ச்சியாகத் தெரிந்த அருவி இப்போது தண்ணீரின் நடனமாகத் தெரிகிறது. என்னைச் சுற்றி இருக்கும் எல்லாமே இந்த உலகமே ஆனந்தமயமாக எனக்கு இப்போது தெரிகிறது. என் தொழிலில் என் நடவடிக்கைகளில் எந்த மாறுதலும் இல்லை. உண்மைதான். ஆனால் என் உள் மையம் - அகம் மாறிவிட்டது. அதனால் உலகமே எனக்கு மாறிவிட்டது".

('வாழ்தல் ஒரு கலை' நூலில் சுகி.சிவம்)

# ஓ தென் அமெரிக்கா!



தென் அமெரிக்க ஹோட்டல்களில், சாப்பிடும் உணவுப் பண்டங்களுக்கு எடைக்கு ஏற்ப தான் விலை அதாவது, வடை, நாலு இட்லி, ஒரு மசால் தோசை சாப்பிடுகிறோம் என்றால், அவற்றை ஒரு தட்டில் வைத்து எடை போட வேண்டும். 500 கிராம் இருந்தால் ஒரு விலை, 650 கிராம் இருந்தால் ஒரு விலை... ஆச்சரியம்தான்!

தென் அமெரிக்க நாடுகள் புரட்சிக்கு மட்டுமல்ல, சர்வாதிகார ஆட்சிக்கும் பெயர் பெற்றவை. சில தலைவர்கள் 10 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சி நடத்தி, கோடி, கோடியாய் கொள்ளையடிப்பர்! நாட்டில் எதிர்ப்பு கிளம்பும். உடனே, சேர்த்த பணத்துடன், ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்து விடுவர். இப்படி பல தென் அமெரிக்க நாடுகளில் நடந்துள்ளது.

அப்படிப்பட்ட ஒரு சர்வாதிகாரி தான் மார்கோஸ் பெரஸ். தென் அமெரிக்காவில் உள்ள வெனிசுலா நாட்டை, 10 ஆண்டுகள் சுரண்டிய பின், ஸ்பெயின் நாட்டுக்கு ஓடிப் போனார்.

மற்றொரு தென் அமெரிக்க நாடு பெரு; அதன் ஜனாதிபதியாக இருந்தவர் புஜிமோரி. இவரது பெற்றோர் ஜப்பானியர்; பெருவில் குடியேறியவர்கள். புஜிமோரி பெருவிலேயே பிறந்து, வளர்ந்து, ஆட்சியை பிடித்தவர், பெருந்தொகையை சுருட்டி ஜப்பானுக்கே ஓடிப் போனார். இருவரும் சுருட்டியது, ஆளுக்கு 1000 கோடி ரூபாய்...

# சினிமா சினிமா

✤ கௌதம் வாசுதேவ்மேனனின் இயக்கத்தில் கமல் ஜோடியாக "வேட்டையாடு விளையாடு" படத்தில் நடித்துக் கவனம் பெற்ற கமலினி முகர்ஜி, 6 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தமிழ் சினிமாவுக்கு வருகிறார். கார்த்திக் சுப்புராஜ் இயக்கும் "இறைவி" படத்துக்காக தேர்வாகியுள்ளார். விஜய் சேதுபதி, எஸ்.ஜே.சூர்யா, பாபி சிம்ஹா, அஞ்சலி, கருணாகரன் உள்ளிட்ட பலர் நடிக்கும் இப்படத்தில், எஸ்.ஜே.சூர்யாவின் ஜோடியாக நடிக்கிறார்.

✤ சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் படம் "புலி." ஹன்சிகா, ஸ்ருதிஹாசன், சுதீப், தம்பி ராமையா நடித்து வரும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரம் ஏற்று நடிக்கிறார் ஸ்ரீதேவி.. விநாயகர் சதுர்த்தியன்று படம் வெளியாகவுள்ளது. படத்தின் டீஸர் கடந்த வாரம் இணையத் தளங்களில் வெளியானது. டீஸரில் இடம் பெற்றுள்ள நேர்த்தியான காட்சி அமைப்பு, வசனப்பகுதிகள் பலரையும் ஈர்த்துள்ளது. டீஸரை மட்டும் இதுவரை 11 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளதாகத் தகவல்.


✤ அரசியல் பிரவேசத்துக்குப் பின் சினிமாவில் இருந்து முழுவதுமாக ஒதுங்கினார் சிரஞ்சீவி.. சுமார் ஆறு ஆண்டுகளுக்குப் பின் சினிமாவில் மறுபிரவேசம் செய்ய இருப்பதால், எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது. புரி ஜெகநாத் இயக்கும் இப்படத்துக்காக தயாராகி வரும் சிரஞ்சீவி, தீவிரமான உடற்பயிற்சிகளிலும், லண்டன் சென்று சிறப்பு தோற்றத்துக்கான சிகிச்சைகளையும் மேற்கொண்டுள்ளார். எதிர்வரும் ஆகஸ்ட் 22 ஆம் திகதி சிரஞ்சீவியின் பிறந்த நாளன்று படப்பிடிப்புகள் தொடங்குகின்றன. இப்படம் சிரஞ்சீவிக்கு 150ஆவது படம்.

✤ திருமணமான ஹீரோயின்கள் திரைக்குத் திரும்பும் காலம் இது. அஜித்துடன் "ராஜா", விக்ரமுடன் "காதல் சடுகுடு", விஜயகாந்துடன் "ராஜ்ஜியம்" உள்ளிட்ட படங்களில் நடித்த பிரியங்கா திரிவேதி, கன்னட நடிகர் உபேந்திராவை திருமணம் செய்து கொண்டார். அதன் பின் சினிமாவில் இருந்து ஒதுங்கிய பிரியங்கா குழந்தைகள் வளர்ப்பில் கவனம் செலுத்தி வந்தார். இந்நிலையில் பிரியங்காவின் சினிமா ஆசைக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளார் உபேந்திரா. கன்னடத்தில் உருவாகும் இப்படத்தை இயக்க நரும் ஒளிப்பதிவாளருமான தினேஷ்பாபு இயக்குகிறார். படத்தின் பெயர் பிரியங்கா. இப்படத்தில் பொலிஸ் அதிகாரியாக பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். இதன் மூலம் 10 ஆண்டுகளுக்குப் பின் திரைக்கு வருகிறார் பிரியங்கா திரிவேதி.

✤ அடுத்த சர்ச்சைக்கு தயாராகி விட்டார் ராம்கோபால் வர்மா. சந்தன கடத்தல் வீரப்பனின் வாழ்க்கையை இந்த முறை படம் பிடிக்கிறார். "கில்லிங் வீரப்பன்" என பெயரிடப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாகவுள்ள இப்படத்தில் சிவ்ராஜ் குமார் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார். கன்னட சினிமா உலகில் சூப்பர் ஸ்டாராக திகழ்ந்த ராஜ்குமாரை வீரப்பன் கடத்திச் சென்று 108 நாட்கள் சிறைவைத்து பின்னர் விடுவித்தார். அதனால் ராஜ்குமாரின் மகனான சிவ்ராஜ் குமார் வீரப்பனை படத்தில் பழி வாங்குவது போல் திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது.

✤ கயல் படத்தை அடுத்து, பிரபுசாலமன் இயக்கும், புதிய படத்தில் நடிக்கிறார் தனுஷ். படத்தின் முழுக்கதையும் ரயிலிலேயே நடக்கிறது. சண்டைக் காட்சிகளை ஹொலிவுட் படங்களுக்கு இணையாக படமாக்க வேண்டும் என்று நினைத்த பிரபுசாலமன், எக்ஸ்மேன், பேட்மேன், பிகின்ஸ் மற்றும் ஸ்கை.'.போல் உள்ளிட்ட பல பிரம்மாண்ட ஹொலிவுட் படங்களுக்கு சண்டைப் பயிற்சி கொடுத்த, ரோகர் யுயன் என்பவரை, இப்படத்திற்கு ஒப்பந்தம் செய்துள்ளார்.

✤ முன்னாள் நடிகை மேனகாவின் மகள் கீர்த்தி சுரேஷ் தமிழில், ரஜினிமுருகன் படத்தில் ஒப்பந்தமான இவர், அப்படத்தில் நடிக்கும் போதே, பாம்புசட்டை மற்றும் இது என்ன மாயம் போன்ற படங்களில் ஒப்பந்தமானவர், தற்போது, தனுஷை வைத்து பிரபுசாலமன் இயக்கும் படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார்.



✤ வடிவேலுவின் காமெடி பாசறையில் எழுத்தராக இருந்தவர், தம்பி ராமையா. அதையடுத்து, இந்திரலோகத்தில் நா.அழகப்பன் படத்தை இயக்கிய அவர், மைனா படத்தில் நடித்து, தேசிய விருது பெற்ற பின், முழு நேர நடிகராகி



விட்டார். தற்போது தன் சுயசரிதையை எழுத துவங்கியுள்ளார்.

✤ ராகவா லாரன்ஸ் இயக்கி, நடித்து வெளியான, காஞ்சனா-2 படம் தமிழ் மற்றும் தெலுங்கு என, இரு மொழிகளையும் சேர்த்து, இதுவரை, 108 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. இது, விஜய் மற்றும் அஜித் படங்கள் இதுவரை செய்த வசூலை விட அதிகம் என்பதால், அவர்கள் சற்றே அதிர்ச்சியடைந்துள்ளனர்.

✤ "உதவி இயக்குநராக சென்னையிலிருந்து நான் ஊருக்குப் போகும் போதெல்லாம் நான் மதிக்கும் உறவினர் ஒருவரை வைத்து என்னிடம் சமரசம் பேசி மனதை மாற்றுவார்கள். "சினிமாவில் இலட்சம் பேர் வருகிறார்கள். ஒருவன்தான் ஜெயிக்கிறான். உன்னால் முடியுமா?" என்பார்கள். அப்போது "அந்த ஒருவன் நான்தான்..." என்பேன். நான் சினிமா தான் என்பதில் உறுதியாக இருந்தேன். நம்பிக்கையாக இருந்தேன். பிடிவாதமாக இருந்தேன். ஒரு நாள் குடும்ப ஜோதிடர் வந்தார். "உன்னால் சினிமாவில் ஒரு '.பிரேம் கூட எடுக்க முடியாது" என்று அவர் சொன்ன மூன்றாவது மாதத்தில் "ஆனந்தம்" படப்பிடிப்பைத் தொடங்கி விட்டேன். இன்றைக்கு நான்கு படங்கள் தயாரிக்கிற அளவுக்கு வளர்ந்திருக்கிறோம். சினிமாவில் நம்பிக்கை மட்டும் இருந்தால் போதும். நான் ஒவ்வொரு தடவையும் வெற்றியும் தோல்வியும் மாறி மாறிப் பார்த்து விட்டுத்தான் வந்திருக்கிறேன். இது என் முதல் பாதி. மறுபாதி இனிமேல்தான்..."

- "ரஜினிமுருகன்" பட விழாவில் இயக்குநர் லிங்குசாமி.

✤ அட்டகத்தி தினேஷ் நடிக்கும், ஒரு நாள் கூத்து என்ற படத்தில், நிவேதா பெத்துராஜ் நாயகியாக நடிக்கிறார். இவர், ஐக்கிய அரபு எமிரேட்சில், மிஸ் இந்தியா பட்டம் வென்றவர்.

✤ ப்ளஸ் டூ பரீட்சையில் சமீபத்தில் தேர்ச்சி அடைந்துள்ள நடிகை லட்சுமிமேனன், கேரளாவில் உள்ள தேவரா எஸ்.எச். கல்லூரியில் பி.ஏ.கம்யூனிகேட்டிவ் ஆங்கிலப் பிரிவில் சேர்ந்து படிக்கிறார்.


✤ திருநங்கை மீது ஒருவன் காதல் கொள்வது போன்ற ஒரு கதையை, மம்முட்டியை வைத்து படமாக்குகிறார், தங்கமீன்கள் ராம்.

✤ பரதேசி படத்தில், ஒரு குழந்தைக்கு அம்மாவாக நடித்த தன்ஷிகாவிற்கு, அதன்பின், நடித்த படங்கள் வெற்றி பெறவில்லை. தற்போது திறந்திடு சீசே என்ற படத்தில், ஆக்‌ஷன் ரோலில் நடித்து வரும் தன்ஷிகா, அதே படத்தில், ஒரு பாடலில் அயிட்டம் டான்சும் ஆடியிருக்கிறார்.

✤ தமிழில், "பை பை பை கலாச்சி பை..." என, சில ஹிட் பாடல்களை பாடிய நடிகை ரம்யா நம்பீசன், தற்போது, மலையாளத்தில் இரு படங்களில், பாடியுள்ளார்.

# தெற்கு ஆளுநருடன் சந்திப்பு இரு மாகாண மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும்

## வடமாகாண ஆளுநர் பளிகக்கார தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மக்களுக்கும் தென்மாகாண மக்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில், இரு மாகாண ஆளுநர்களின் வருகை அமைந்துள்ளதாக வடமாகாண ஆளுநர் பளிகக்கார நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில், சேதன விவசாய முறைமை தொடர்பான கலந்துரையாடல் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும உரையாற்றுகையில், சேதன விவசாய முறைமை எமது அபிவிருத்திக்கு சிறந்ததாக அமைகின்றது. சேதன விவசாய முறைமை யாழ். மாவட்டத்திற்கு மட்டுமன்றி பூகோளத்திற்கும் அவசியமான ஒன்றாக இருக்கின்றது.

வாழ்வுக்குரிக்குரிய விடயம் என்ற படியினால் விஷேட விதமான கவனம செலுத்த வேண்டும். மக்களுக்கு பிரயோசனத்தினைக் கொண்டு செல்லக்கூடிய வகையில் மாகாண கட்டமைப்புக்கள் மற்றும் மத்திய கட்டமைப்புக்கள், பல்கலைக்கழக கட்டமைப்புக்கள் மற்றும் கல்வி சார் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து மக்களுக்கு சேவை செய்ய முடியுமா என்று சிந்தித்து செயற் படவேண்டும்.

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாண ஆளுநர்கள் இந்த நிகழ்விற்கு வருகை தந்து எமது விவசாயிகளுக்கான சேதன விவசாய முறைமை பற்றி கலந்துரையாடுவது, வடக்கு தெற்கு நல்லிணக்கத்தினை வளர்த்தல், புரிந்துணர்வினை வளர்த்தல், ஒற்றுமையை வளர்த்தல், நம்பிக்கையினை வளர்த்தல் போன்ற விடயத்தில் இந்த நிகழ்வு ஒரு மைல்கல்லாக இருக்கின்றது.

சேதன விவசாய முறைமை என்பது யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு உயிரை மீள வழங்குகின்ற ஒரு விவசாய முறைமையாக இருக்கின்றது.

அசேதன முறைமைகளை பயன்படுத்தியதனால் நீர் வளம மாசுற்றதாக காணப்படுகின்றது. நிலத்தடி நீர் வளங்கள் மாசடைந்துள்ளன. நீர் மாசுபடுதலுக்கு தீர்வாக சேதன விவசாய முறைமை மாறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

நிலத்தடி நீர் மாசடைதலை தடுக்கவும் முடியும் யாழ் மாவட்டத்தில் இந்த முறைமை காலத்தின் தேவையாக இருக்கின்றது.

சிரேஸ்ட விவசாயிகள் மற்றும் கல்விமான்கள் அனைவரும் குறித்த சேதன விவசாய முறைமை பற்றி நன்கு ஆராய்ந்து உரிய வழி முறைகளையும் தீர்வுகளையும் முன்வைக்குமாறு வடமாகாண ஆளுநர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

# கிளி.தமிழ்ச்சங்கம் நடாத்தும் தமிழ் இலக்கிய கருத்தரங்கு

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ் இலக்கிய கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சங்கத்தின் தலைவர் வே.இறைபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கந்தையா பொன்னம்பலம் நினைவாக நடைபெறவுள்ள நிகழ்வில் நினைவுரையை 'தாய்மொழிக் கல்வி' எனும தலைப்பில் யாழ்பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளதோடு சிறப்புரையை கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம் நிகழ்த்தவுள்ளார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் தமிழ் இலக்கிய கருத்தரங்கு நடைபெறவுள்ளது.'கைகேயி சூழ்வினைப் படலம்' எனும் தலைப்பில் சிறுகதை முனைவர் திருவாட்டி மனோன்மணி சண்முகதாஸ் கட்டுரை நாவல எனும் தலைப்பில் பேராசிரியர் தி.வேல்நம்பி தமிழ் இலககிய வரலாறு,திருக்குறள் எனும் தலைப்பில் கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரியர் ந.குகபரனும், ஈழத்து இலக்கிய வரலாறு எனும் தலைப்பில் கிளிநொச்சி திருவையாறு மகா வித்தி யாலய ஆசிரியர் சு.லோகேஸ்வரனும் உரை நிகழ்த்தவுள்ளனர். (90)

# தகவல் தொடர்பாடல் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில சான்றிதழ் பெறுவதற்கான கற்கை நெறிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்பதாரி 16இற்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராகவும க.பொ.த. (சா/த) தர பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம் ஆங்கிலம் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த உயர் தரத்தில் இரு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டுமென வும் அதிகார சபையின் யாழ் மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ண பாலன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விபரங்களுடன் பயில விரும்பும் பயிற்சி நிலையத்தையும் குறிப்பிட்டு மாவட்ட அலுவலர், இல: 44, சோமசுந்தரம் வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சூரிய வலுச்சக்தி நிறுவனம் யாழில் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

இகோஸ்டீம் சூரிய மின் வலுச் சாதனங்களை வழங்கும் நிறுவனம் நேற்றுமுன்தினம் நாவலர் வீதி, மருதடிச் சந்தி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி ரதிப்பிரியா ரமேஷினால் சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

சூரிய சக்தியைக் கொண்டு தேவையான மின் சக்தியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு வாடிக்கையாளர்களுக்கு உதவ முன்வந்துள்ள இந் நிறுவனம் ஒரே முதலீட்டில் குறுகிய கால இலாபத்தையும், நீண்ட கால உத்தரவாதத்தையும், எக் காலத்திலும் முற்று முழுதான பழுதற்றதாகவும் எதிர் கால தேவைக்கேற்ப மேம்படுத்தக் கூடியதுடன், மின்சார சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுமாகும் அத்துடன் அனுபவம் மிக்க நிபுணர்களினால் உலக தரத்திலான சேவைகளையும் ஒரே முதலீட்டில பணத்தையும், சூழலையும் பாதுகாக்க சந்தர்ப்பத்தையும் வழங்குகிறது.

பசுமை ஆற்றலைப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்யும் நிறுவனமாகிய இகோஸ்ரீம் நிறுவனம் சூரிய மின் சக்தி காற்றலை மின் சக்தி வசதிகளை வீடுகள, வியாபார நிலையங்களுக்கு வழங்கததயாராகவுள்ளது. (137)

# கோழிக்குஞ்சுகள் வழங்கி வைப்பு



வன்னிகுறோஸ் சுகாதார நிறுவனத்தின் தொடரும் வாழ்வாதார நலத் திட்டத்தில் கோழிவளர்ப்பை மேம்படுத்துவதற்காக கடந்த 30ஆம் திகதி மன்னார் சாந்திபுர கிராமத்தில் ஒரு தொகுதி பயனாளிகளுக்கு கோழிக குஞ்சுகளையும் அதற்குரிய உபகரணங்களையும் வன்னிகுறோஸ் சுகாதார நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் வழங்கி வைத்ததார். மேற்படி நிகழ்வில் நகர சபை உறுப்பினர் குமரேசன், கால்நடை திணைக்கள பொறுப்பு வைத்தியர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வேட்பு மனு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுப்பணத்தினை செலுத்துமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தனபாலசிங்கம் அகிலன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், யாழ்.மாவட்டத்தில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகள் தற்போது, வேட்பு மனுக்களை பெற்றுக்கொண்டு வருகின்றன.

அதன் பிரகாரம், இதுவரையில் 3 அரசியல் கட்சிகள் தமக்கான வேட்பு மனுவிற்கான விண்ணப் படிவங்களை பெற்றுக்கொண்டுள்ளன.

இவ்வாறு தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் கட்டுப்பணத்தினைச் செலுத்த முடியும்.

அத்துடன், வேட்பு மனுக்களை நாளை மறுதினம் தொடக்கம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்குள் தமக்கான கட்டுப்பணத்தினை செலுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் யாழ். மாவட்ட தேர்தல் தொகுதியில் 5 இலட்சத்து 29 ஆயிரத்து 232 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் யாழ் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (25)

## முரசின் இன்றைய பலன்

(05.07.2015 ஞாயிற்றுக்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 20 ஆம் திகதி.
சதுர்த்தி திதி / மரண யோகம்
அவிட்ட நட்சத்திரம் பின் இரவு - 12.32 வரை பின் சதயம்
இராகுகாலம் 4.27 - 5.57 வரை சுப நேரம் 8.57 - 10.27 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வீட்டுத்திட்டம் கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாது போய்விடல்

**ரிஷபம்**
கிருமி நாசினி பாவித்த வேளை கண்டத்துக்கு ஒப்பான நிலை ஏற்படல்

**மிதுனம்**
வழுக்கல், சறுக்கலினால் உறுப்பு பாதிக்கப்படல்

**கடகம்**
சத்திரசிகிச்சைக்கு இலட்சக் கணக்கில் பணம் தேவையென மக்களிடம் உதவி கோரல்

**சிம்மம்**
பிள்ளைகளைப் பராமரிக்க இரண்டாம் தாரத்தில் கால் பதிக்க எண்ணமிடல்

**மீனம்**
இயன்றவரை சகோதரர் விடயத்தில் தலையிடுவதைக் கைவிடல்

**கன்னி**
சகபாடிகளின் உறவைத் துண்டித்து விடும்படி பணித்த பெற்றோருடன் முரண்படல்

**கும்பம்**
வியாபார உத்திகளை மாற்றுவதன் மூலம் இலாபம்

**மகரம்**
சத்திர சிகிச்சைக்கு நாட்குறித்தும் அச்சத்தின் காரணமாகச்

**தனுசு**
அரச கரும மொழிபாஷை சித்தியின்மையால் பணியின் உயர்வு பாதிக்கப்படல்

**விருச்சிகம்**
காலநிலையின் தாக்கத்தினால் பயிர்கள் பாதிப்படையும் நிலை ஏற்படல்

**துலாம்**
கடனை அடைத்து மானத்தைக் காப்பாற்ற சொத்தின் ஒரு பகுதியை விற்றுவிடல்

# வடக்கில் பெண்களின் பாதுகாப்பை தேசவழமைச்சட்டம் உறுதிசெய்கிறதா?

## சட்டத்துறை விரிவுரையாளர் உரை

(யாழ்ப்பாணம்)

தேசவழமைச் சட்டத்தில் பெண்களைப் பாதிக்கும் விடயங்களை ஆராயவென கலந்துரையாடலொன்று யாழ்.யூரோவில் கேட்போர் கூட்த்தில் நேற்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் சட்டத்தரணியும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்தின் வருகை விரிவுரையாளருமான திருமதி கமலா நாகேந்திரா வளவாளராக கலந்துகொண்டு உரையாற்றினார்.

பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண்பதில் சட்டம் பற்றிய அறிவின் முக்கியத்துவத்தை விளக்கி அவர் உரையை ஆரம்பித்தார்.

இது விடயத்தில் சட்ட உதவி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பாதிக்கப்படும் பெண்கள் அதன் உதவியை பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் ஆலோசனையை பெறுவதில் பாதிக்கப்பட்டோர் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவதில் சமூகவியலாளர்கள மற்றும் மனிதநேயப்பணியாளர்கள் சட்டம் பற்றிய போதிய அறிவையும் விழிப்புணர்வையும் கொண்டிருப்பதன் அவசியம் குறித்தும் வளவாளர் எடுத்துக்கூறினார்.


போர்ச் சூழல் மற்றும் குடும்பங்களுக்கிடையிலான பிரிவினை காரணமாக பாதிப்புக்குள்ளாகும் பெண்கள் நிவாரணம் பெறமுடியாது சிரமங்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டன.

திருமணத்தின் போது பெண்களுக்கு கொடுக்கப்படும் மற்றும் கணவரது முதுசம் போன்ற அசையும் அசையாச் சொத்துங்களை குடும்பமாக வாழும் காலத்திலும் அவ்வாறே கணவன் - மனைவி பிரிந்து வாழும் சந்தர்ப்பந்திலும் இருவருக்கிடையே பகிர்ந்து கொள்வதில் தேசவழமைச் சட்டத்தில் ஒன்றுக்கு பாதகமாக இருக்கும் அம்சங்கள் பற்றி இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

குடும்பமாக வாழ்ந்த காலத்தில் கணவரும் மனைவியும் ஈட்டிய சொத்துக்கள், ஆதாயங்களை குடும்பம் பிரியும் போதும் அவற்றை விற்பனை செய்யும் போதும் அவ்வாறே பிள்ளைகள் உறவினருக்கு கைமாற்றும் போது பெண்களுக்கான சட்டரீதியாக உரித்து மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் தேசவழமைச் சட்டத்தில் நிலவும் சாதகமான மற்றும் பாதகமான அம்சங்கள் பற்றியும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தைத் தளமாக கொண்டியங்கும் பெண்களுக்கான் அரச சார்பற்ற அமைப்புக்கள் சட்ட உதவி ஆணைக்குழுவின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், உள்நாட்டிலும் அவ்வாறே வெளிநாட்டிலும் மனிதநேயப் பணியில் ஈடுபடும் சட்டத்துறை சார்ந்த சமூகப்பணியாளர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

யாழ்.தேசவழமைச் சட்டம் கண்டிய சட்டம் மற்றும் முஸ்லிம்களுக்கான சட்டத்தில் பெண்களுக்கான சட்டரீதியாக பாதுகாபபில் நிலவும் குறைநிறைகள் இது விடயத்தில் தேசவழமைச்சட்டம குறித்து கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் குறித்தும இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.



யாழ்.இணுவில் கந்தசுவாமி கோவிலின் மஞ்சத் திருவிழா கடந்த வியாழக்கிழமை இரவு வெகு விமரிசையாக இடம்பெற்ற போது...

# வடக்கில் சுற்றுலாத்துறை துரித அபிவிருத்தி

## வடமாகாண சுற்றுலா அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சுற்றுலாத் துறைகளை மேம்படுத்த வடமாகாண சுற்றுலா மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பல்வேறு துரித நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

முதற்கட்டமாக ஏற்கனவே உள்ள சுற்றுலா மையங்களை நவீனமயப்படுத்தி அதனை ஊக்குவிப்பது மற்றும் இரண்டாவது கட்டமாக சுற்றுலாத்துறைக்குள்ள அம்சங்கள், இடங்கள், இயற்கையான கடற்கரைகள் மற்றும் வளங்கள் இருந்தபோதும் இதுவரை உள்வாங்கப்பாத விடயங்களை முன்னெடுத்துச் செல்வது போன்ற வற்றிற்காக இதற்கான தரவுகளை வடமாகாண சுற்றுலா அமைச்சு திரட்டி வருகின்றது.

எனவே வடமாகாணத்தில் இதுவரை இனங்காணப்படாத சுற்றுலா மையங்களை இனங்கண்டு அது பற்றி ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கையிடுமாறு வடமாகாண சுற்றுலா அமைச்சு சகல உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களை கோரியுள்ளது.

இவ் ஆய்வுகளானது சுற்றுலாத்துறையின் நீண்டகால அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பது சுற்றுலாத் துறைகளுக்கு இடையிலான ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு ஏற்பாடுகளை முன்னிலைப்படுத்துவது.

சுற்றுலாத் துறையின் உள்ளூராட்சி மன்றங்களின் பங்குபற்றல் நெறி முறைகளை முன்னெடுப்பது.

இதன் ஊடாக வடமாகாணத்தில் இதுவரை இனங்காணப்படாத புதிய சுற்றுலா மையங்களை இனங்கண்டு பேண்தகு வழிமுறைகளுக்கு இட்டுச்செல்வது போன்ற செயற்பாடுகளை துரிதப்படுத்துவதாக இருக்கும் என வடமாகாண சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.(92)

# நாய்களுக்கு தடுப்பூசி

(குருநகர்)

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களினால் வீடுகளில் வளர்க்கும் நாய்களுக்கு விலங்குநோய் ஏற்பட்டிருப்பதாக யாழ்.மாநகர சபை பொதுச் சுகாதாரப் பிரிவினர் ஒலிபெருக்கி மூலம் குருநகர்ப் பகுதிகளில் எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

நாய்களுக்கு விலங்குநோய் தடுப்பூசியான ஏ.ஆர்.வி.மருந்து கடந்த இருதினங்களாக காணிக்கை மாதா கோவில் மற்றும் கார்மேல் அன்னை ஆலய வளாகங்களில் யாழ்.மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் வழங்கி வருகின்றனர்.

இதற்காக 20 ரூபா கட்டணம் செலுத்தி குருநகரில் வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளுமாறும் அவ்வறிவித்தலில் மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர். (68)

# பதிவிருக்கப் பெட்டகம்

ஐன்ஸ்டீன் ஒருமுறை ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ரயில் நிலையத்தில் நின்றதும், ஏதாவது ஆகாரம் பூசிக்க விரும்பியவர், அங்கிருந்த உணவகத்துக்குச் சென்றார். உணவகத்தின் சப்ளையர் ஒரு மெனுகார்ட்டை எடுத்து ஐன்ஸ்டீனிடம் கொடுத்தார்.

ஆனால், கண்ணாடியை ரயிலிலேயே வைத்துவிட்டு வந்திருந்தார் ஐன்ஸ்டீன் "மெனுகார்ட்டை நீயே படித்துச் சொல்" என்றார் சப்ளையரிடம். உடனே அந்த சப்ளையர் சொன்னார். "நானும் உங்களை மாதிரி படிக்கத் தெரியாதவன்தாங்க!"

*** *** *** ***

"என் அப்பாவுக்கு எல்லாமே அவசரம்தான்" என்றான் ரகு.

"அப்படியென்ன அவசரமாய் பண்ணிவிட்டார் உன் அப்பா?" என்று கேட்டான் கிருஷ்ணன்.

"பிறகென்னடா... ஜூலை 1 ஆம் திகதி முதல் ஹெல்மெட் கட்டாயம் என்று அறிவிப்பு வந்திருக்கு. அதுக்குள்ளாகவே ஒரு புது ஹெல்மெட் வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்"

கிருஷ்ணனுக்கு எதுவும் புரியவில்லை. ரகுவின் அப்பா நல்லதுதானே செய்திருக்கிறார். எதற்காக அவன் அலுத்துக் கொள்கிறான்?

அதைக் கேட்கவும் செய்தான்:

"உன் அப்பா நல்லதுதானே செய்திருக்கிறார். எதுக்கு அலுத்துக் கொள்கிறாய்?"

ரகு சொன்னான்:

"டூ வீலர் வாங்கிறதுக்கு முந்தி ஹெல்மெட்டுக்கு என்ன அவசரம்?"

*** *** *** ***

நாடகத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் முதன் முதலில் போட்டது எமன் வேடம்! நாடகக் கதைப்படி தன் கணவனின் உயிரைத் தர வேண்டும் என்று கெஞ்சும் பெண்ணிடம் கடைசிவரை தரக் கூடாது. விடிய விடிய நடக்கும் இந்த நாடகத்தின் கதைப்படி உயிரைப் பிரிக்கும் காட்சியில் என் கணவர் உயிரைத் தர வேண்டும் என்று அந்தப் பாத்திரத்தில் நடித்த பெண "கெஞ்சோ கெஞ்சு' என்று கெஞ்சியபோது மனம் இளகிவிட்ட கலைவாணர் "தந்தோம்' என்று சொல்லி விட்டார். அன்று நாடகம் முடிந்ததும் நாடகக் கம்பெனியாரிடம் செம அடி வாங்கினார் கலைவாணர்!

*** *** *** ***

"மச்சான் எக்ஸாம் எப்பிடி... செய்தியா?"

"200 கேள்விக்கு 195 கேள்விக்குச் சரியான...."

"கை குடு மச்சான்... அப்படியென்றால் வேலை நிச்சயம் என்று சொல்லு"

"அவசரப்படாதே. 195 கேள்விக்குச் சரியான விடை தெரியேல்லை. 5 கேள்விக்கு மட்டும்தான் சரியான பதில் எழுதி இருந்தேன் என்று சொல்ல வந்தேன்."

*** *** *** ***

"டேய்! என் காதலி நல்ல அழகு. அவளைத்தான் நான் கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் வீட்டில பார்த்திருக்கிற பெண் பெரிய பணக்காரி. யாரைக் கல்யாணம் செய்யிறதென்று குழப்பமா இருக்குடா?"

"காதலியை கை விடுவது பாவமடா பேசாமல் அவளையே கட்டிக்கொள்"

"அப்ப, வீட்டில பார்த்த பெண்?"

"அவ அட்ரசை எனக்குக் குடு"

*** *** *** ***

"மனுஷனுக்கு இப்ப வாற காய்ச்சல் எல்லாமே "தங்கம்' மாதிரித்தான் அண்ணை"

"என்னடாப்பா சொல்றாய் நீ... காய்ச்சலுக்கும் தங்கத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"அண்ணை... காய்ச்சல் ஒரு நாளைக்கு ஏறும்... ஒரு நாளைக்கு இறங்கும். தங்கத்தின்ர விலையும் ஒரு நாளைக்கு ஏறும்... இன்னொரு நாளைக்கு இறங்கும்... தங்கத்தை நகையாப் பண்ண செய்கூலி, சேதாரம் என்று செலவு பண்ண வேண்டியிருக்கு. அதுபோல காய்ச்சலை குணமாக்க, மருந்து, மாத்திரை, டாக்டர் ஃபீஸ் என்று செலவு ஆகுது. தங்கத்தை....."

"போதும்... போதும் நிறுத்து. நான் ஒத்துக்கொள்கிறேன்"

# இலங்கை விவகாரம் தொடர்ந்தும் கரிசனை வேண்டும்

## ஐ.நா.விடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பாக தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய பேரவை உள்ளிட்ட அமைப்புக்களே இந்தக் கோரிக்கையை கடிதமொன்றின் மூலம் விடுத்துள்ளன.

குற்றச் செயல்களுக்கு பொறுப்புக் கூறுதல் மற்றும் நீதி தொடர்பிலான விவகாரங்களில் இலங்கை அரசாங்கம் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் புதிய நல்லாட்சி அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து சில சாதக மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், இன்னும் பல்வேறு விடயங்களில் முன்னேற்றம் அவசியப்படுவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பில் யதார்த்தமானதொரு பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல ஐ.நா. மனித உரிமைப் பேரவையும் ஏனைய உறுப்பு நாடுகளும் அடிப்படை சவால்களை உதாசீனம் செய்துவிடக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால உள்ளவ விசாரணைப் பொறிமுறைமை குறித்து திருப்தியடைய முடியாத நிலையில், சர்வதேச பங்களிப்புடன் அல்லது சர்வதேச நீதவான்களின் பெரும்பான்மையான பங்களிப்புடன் விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையுடன் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக அளித்த வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய பேரவை, மனித உரிமைகளுக்கான கைரோ நிறுவனம், பொதுநலவாய மனித உரிமைகள் அமைப்பு, மனித உரிமைகள் சட்ட நிலையம், சர்வதேச ஜூரிகள் சபை, பாகுபாடு மற்றும் இனவாதத்திற்கு எதிரான சர்வதேச ஒன்றியம், இலங்கை அமைதி மற்றும் நீதிக்கான பிரசாரத்திற்கான சர்வதேச மனித உரிமைகள் சேவை ஆகிய அமைப்புக்களும் இந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளன.

# உள்ளகப் பொறிமுறை உருவாக்கம் ஐ.நா.மனித உரிமை ஆணையாளருக்கு மனு

(கொழும்பு)

யுத்தக்குற்ற விசாரணை தொடர்பான உள்ளகப் பொறிமுறை உருவாக்குவது தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடன் எந்தவொரு கலந்தாய்வையும் இலங்கை அரசாங்கம் செய்யவில்லை என்று சுட்டிக் காட்டி ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு, தமிழ் சிவில் சமூக அமையம், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், விஞ்ஞான ஆசிரியர் சங்கம், மாணவர்கள் சங்கம், வவுனியா பிரஜைகள் குழு, மன்னார் பிரஜைகள் குழு, காணாமற்போனோரின் உறவினர் சங்கம், கிழக்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் கூட்டமைப்பு உட்பட வடக்கு கிழக்கைச் சேர்ந்த 15 வெகுசன அமைப்புக்கள் சேர்ந்து கூட்டாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

மார்ச் மாதம் 28ஆவது கூட்டத்தொடரில் தொடக்கவுரை ஆற்றிய போதும், கடந்த மாதம் 29ஆவது கூட்டத்தொடரில் தொடக்கவுரை ஆற்றிய போதும் ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் உள்ளகப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதாயின் அது பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசித்தே உருவாக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கியிருந்தார். அவ்வாறான ஆலோசனை செயன்முறை ஒன்று நடைபெற்று வருவதாக இலங்கை வெளிநாட்டமைச்சகம் அண்மையில் தெரிவித்துள்ள நிலையிலேயே இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐ.நா.வின் வதிவிடப் பிரதிநிதி நேற்று கொழும்பில் இடம்பெற்ற "மீள்குடியேற்றம் சம்பந்தமான முழுமையான கொள்கை வரையறை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தை உருவாக்கல்" எனும் தலைப்பில் இடம்பெற்ற நிதி வழங்காளர் மாநாட்டில் (Donor Conference on the Comprehensive Policy Frame work and Formulation of the Resettlement Action Plan) உள்ளகப் பொறிமுறை ஒன்றிற்கு ஐ.நா நிதி வழங்கத் தயார் என்று கூறியிருந்தமையை இக்கடிதத்தில் இவ் வமைப்புக்கள் கண்டித்துள்ளன.

செப்ரெம்பரில் ஜெனீவா அறிக்கை வர முன்னரே இப்படியான அறிவிப்புக்கள் தவறானவை என்றும் அவை ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையின் பெறுமதியைக் குறைக்கும் தன்மையானவை என்றும் இவ்வமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. இவ்வறிவிப்பு தொடர்பில் ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் கலந்தாலோசிக் கப்பட்டதா என்று கேள்வியையும் எழுப்புகின்றது.

## வேட்பாளர் பட்டியலில் இவர்களுக்கு இடமில்லை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, முன்னாள் எம்.பி.க்களான துமிந்த சில்வா, சஜின் வாஸ் குணவர்தன ஆகியோர் உள்ளிட்ட எட்டு பேருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வேட்பு மனு வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வசந்த பெரேரா, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, சரண குணவர்தன, மஹிந்தானந்த அலுத்கமகே உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்களுக்கும் இம்முறை கூட்டமைப்பில் வேட்பு மனு வழங்கப்படாது என தெரிவிக்கப்படுகிறது. ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய எவருக்கும் இம்முறை வேட்பு மனு வழங்கப்படாது என செய்திகள் தெரிவிக்கின்றன.

# தேவை ஏற்பட்டால் தனித்தும் களம் குதிப்போம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பத்து மாவட்டங்களில் போட்டியிடவிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் ஐ.தே.க தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருடன் இடம்பெற்றுள்ளது.

ஐ.தே.க.தலைமையகத்தில் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையில் தேர்தல் கூட்டணி தொடர்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், ஐ.தே.க.வின் தவிசாளர் மலிக் சமரவிக்ரம மற்றும் அக்கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கபீர் காசிம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இப்பேச்சு வார்த்தை நம்பிக்கைக்கும் வகையில் அமைந்திருந்ததாக தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கில் நான்கு மாவட்டங்கள் உட்பட 10 மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட விருப்பதாகவும் இது தொடர்பில் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்



வழங்காத இடங்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்றும்

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# உள்ளூராட்சி அபிவிருத்தியில் கணக்காய்வு அதிபதியின் பங்கு என்ன?

**யாழ்ப்பாணம் குடாநாட்டு உள்ளூராட்சி சபைகள் ஊழல் அதிகரித்த மந்தமான நிலையில் செல்கின்றதை வடக்கு பிரதம செயலாளர் அறிவாரா?**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் தேசிய உள்ளூராட்சி கொள்கை எனும் தலைப்பில் கடந்த 18.12.2009 அன்று பல்வேறு பரிமாணங்களுடன் வெளி யாகி இருந்தது. இதில் உள்ளூராட்சி என்பது பிரதேசம் ஒன்றின் எமது நாட்டில் நீண்டகாலமாக இயங்கி வந்த தமது மக்களுக்கு அடிப்படை சேவைகளை வழங்கி பிரதேச அபிவிருத்தியில் ஜன நாயக ஆட்சி செய்ததென்பதாகும்.

இதற்காக காலத்திற்கு காலம் ஏற்படக்கூடிய சமூக, பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதற்கும் தமது மக்களின் சேவைசார் அவசியத்தையும் பிரதேச அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் ஆன நிலையை ஏற்படுத்துவதாகும்.

குறிப்பாக உள்ளூராட்சி துறையை மேம்படுத்துவதற் காக கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில் நாட்டின் அபிவிருத்தி பற்றி புதிதாக சிந்திப்பதற்கும் புதிய அபிவிருத்தி கோணங்களின் ஊடாக மக்கள் பணியை உயர்ந்த நோக்கில் உயர் இலட்சியத்துடன ஊழல் அற்ற, இலஞ்சம் அற்ற மோடியற்ற சூழலில் கொண்டு செல்ல வேண்டும் என்பதனை உள் ளூராட்சி தேசிய கொள்கையின் கீழ் கொள்கை சட்டத்தின் தர்க்க ரீதியான பின்னணி, நோக்கங்கள், கொள்கை அமைப்பு, பிரதிநிதித்துவ சனநாய கமும் இணககப்பாடான அரசியலும், வளங்கள் நியாயமாக பகிரப்படு தலும், வறுமையை ஒழிப்பதும் சமூக தலை யீடும், சமூக பங்கேற்பும் பங்களிப்பும், முகாமைத்துவத்தின் தேர்ச்சி, ஆக்கபூர்வமான பங்களிப்பு, கொள்கை மீளாய்வு உள்ளிட்ட தலைப்புக்களில் முன்னாள் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரால் சட்டத்தின் முறைப்படி இன்று இந்த தேசிய உள்ளூராட்சி கொள்கை வெளியிடப்பட்டு 7 ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. இக்கொள்கை பரப்பு பற்றி வட மாகாணத்தில் உள்ள வடக்கு ஆளுநர், வடக்கு முதலமைச்சர், வடக்கு பிரதம செயலாளர், வடக்கு உள்ளூராட்சி அமைச்சர், செயலாளர், வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கின் உள்ளூராட்சி உதவி ஆணை யாளர்கள், வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள், வடக்கு உள்ளூராட்சி மன்ற அலுவலர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் யாருக்காவது இந்த விடயம் தொடர்பில் பூரண அறிவை பெற்றுள்ளனரா? அல்லது இதன் பகுதிகளை நடைமுறைப்படுத்தவா வது முனைகிறார்களா? இல்லவேயில்லை என்பதுதான் முடிந்த முடிவு. நிச்சயம் இந்தக் கொள்கை பரப்பு வர்த்த மானி அறிக்கையினை வடக்கு மாகாணசபையினரும், வடக்கு பிரதம செயலாளரும் 5 மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் முதலில் அறிந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படையான உண்மை.

இங்கு வடக்குமாகாணம் யாழ்.மாவட்டத்தில் இன்னும் சில நாட்களில் உள்ளூராட்சி சபைகள் முடிவுக்கு கொண்வரப்படவுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் நெல்சிப் – புறநெகும திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வேறு திட்டங்களும் இடம்பெறுகின்றன.

இதில் பெரும்பாலான சபைகளில் நெல்சிப்பில் ஒப்பந்தகாரர், தலைவர், செயலாளர், தொழில்நுட்ப அலுவலர்கள் இணைந்த வகையில் பெரும் ஊழல் மோசடி பதிவாகியுள்ளதாக கொழும்பு தேசிய திட்ட புறநெகும பிரிவிற்கும், யாழ்.மாவட்ட கணக்காய்வு அதிபதிக்கும் தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை ஆய்வு செய்வதற்காக முதலில் வடக்கு ஆளுநர் விசாரணை குழுவை முன்வைத்து அதனை என்ன செய்தார் என்றே தெரியவில்லை முடிவுமில்லை. தற்போது வடமாகாண முதல்வர் விசாரணைக் குழுவை முன்வைத்து புறநெகும மோசடி குறித்து எவரும் விசாரணை செய்யப்படவில்லை, பதவி இறக்கப்பட வில்லை, நிதி மீள அறவிடப்பட வில்லை இடமாற்றம் செய்யப்பட வில்லையென வடமாகாண சபை உறுப்பினர்கள் தினம் தினம் ஆதங்கப்படுகின்றனர்.

தற்போது மீண்டும் யாழ்.மாவட்டதில் உள்ளூராட்சி சபை களில் ஒவ்வொரு வேலைத்திட்டத்திலும் தொழில்நுட்ப அலுவலர்களின் மதிப்பீட்டு மோசடி ஆரம்பித்துள்ளது குறித்து மாகாண சபைக்கு தகவல் கிடைத்துள்ளது. இதற்கு சபைகளின் செயலாளர்களும் ஒத்து ஊதுகின்றனர். தொழில்நுட்ப அலுவலர்கள் ஒப்பந்த வேலைகளில் ஈடுபடுகின்றனர். ஒப்பந்தகாரர்களது கடித தலைப்புக்களை தொழில்நுட்ப அலுவலர்கள் வைத்துள்ளனர்.

ஒப்பந்தகாரர்களுடன் தொழில்நுட்ப அலுவலர்கள் பேரம்பேசுகின்றனர். எத்தனை வீதம் ஒவ்வொரு திட்டத்திலும் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றனர். மொத்தத்தில் ஒரு உள்ளூராட்சி சபைக்கு ஊடாக இடம்பெறவேண்டிய கட்டுமான பணிகள், சேவைகள் என்பவற்றில் ஊழலே உள்நுழைந்துள்ளன.

இதனை கண்காணிப்பதற்கான மத்திய அரசின் கணக்காய்வு அதிபதி மாகாண கணக்காய்வு அதிபதி என்பது எல்லாம் பெயரள வில் மட்டும் தான். வெறும் வேதனமே பெறுகின்றனர். எனவே வடக்கு மாகாண முதல்வர், வடக்கு பிரதம செயலாளர், வடக்கு ஆளுநர் ஆகியோர் முதலில் செய்யவேண்டியது ஊழவலில் தாண்டவமாடும் யாழ். உள்ளூராட்சி செயலாளர்களையும், உள்ளூராட்சி தொழில் நுட்ப அலு வலர்களையும் உடன் இடமாற்றம் செய்யுங்கள்.

இடமாற்றம் செய்யாது எந்த பிரியோசனமுமில்லை என்பதனை வட மாகாண சபை உறுப்பினர்களாகிய நாம் தெளிவாகக் கூறியுள்ளோம்.

மக்களின் வரிப்பணத்தில் இடம்பெறும் சேவை மக்களுக்கே சென்றடைய வேண்டும். இந்த ஊழல் மோசடி மற்றும் நுட்ப அலுவலர் நிதி மோசடி குறித்தும் இடமாற்றம் குறித்தும் உரிய நடவடிக் கைகள், உரியகாலத்தில் இடம்பெறாது விட்டால் சம்பந்தப்பட்ட அனைவரும் விரைவில் வெளிச்சத்துக்கு வருவர். எனவே வடமாகாண உள்ளூராட்சி அமைச்சர் வடமாகாண பிரதம செயலாளரே இது உங்களின் கவனத்திற்கு நேர்மையற்ற நிர்வாகம் அழிவுக்கே அன்றி அபிவிருத்திக்கு அல்ல. மாகாணசபை உறுப்பினர்களின் ஆதங்கம் இது.

வ.சி. அருமைத்துரை,
கொடிகாமம்.

**(05) 17ஆம், 18ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்ட பட அமைப்பைக் கருத்திற்கொண்டு சரியான விடையின் கீழ் கோடிடுக**



A    B    C    D    E

**17.** மாமிச உண்ணி அல்லாத கூட்டம் எது?
1) B,C    2) A, D    3) A, E

**18.** சினேக பூர்வமாக வாழக்கூடிய கூட்டம் யாது?
1) D,B,    2) A, E    3) C, E

**(08) கீழே தரப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு 19 - 21 வரையான வினாக்களுக்கு விடை தருக**




**19.** மாம்பழம் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 10.00    2) ரூபா 15.00    3) ரூபா 20.00

**20.** அப்பிள் பழம் ஒன்றின் விலை யாது?
1) ரூபா 20.00    2) ரூபா 40.00    3) ரூபா 15.00

**21.** அப்பிள் 3 இனதும், மாம்பழம் 1 இனதும் விலை யாது?
1) ரூபா 55.00    2) ரூபா 75.00    3) ரூபா 90.00

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (01) 1 - 3 கட்டுரை | (02) 4. தொடங்கியது | 5. திகழ்வன | 6. சென்றாள் |
| 7. தொங்க விடப்பட்டிருந்தன | 8. செல்லவில்லை | 9. பெய்யவில்லை | (03) 10. துள்ளி துள்ளி |
| 11. வெள்ளை / பஞ்சு | 12. பஞ்சு போன்ற உடல் | 13. ஓடி / குறித்த / ஆடி / பார் | 14. அம்மா |
| 15. முயல் | (04) 16. பழமும் | 17. கனவு | 18. பிள்ளைகள் |
| (05) 19. அநாதை | 20. விளக்கமறியல் | 21. நாத்திகன் | 22. ஐம்பொறி |
| 23. ஆச்சிரமம் | (06) 24. நான் தண்ணீர் குடித்துக்கொண்டு இருக்கிறேன் | | |
| 25. உனக்கு அங்கே போக முடியுமா? | | 26. Where is the post office | |
| 27. ஹமோம கொஹத இன்னே | (09) 28. பிள்ளைகள் விளையாடுகிறார்கள் | | (10) 29. இனிப்பு |
| 30. எதிர்பார்ப்பு | 31. எதிர்ப்புத்தெரிவி | 32. செழிப்பு வாய்ந்த | 33. வெளிப்படையான |
| 34. 1 | 35. 1 | 36. 2 | 37. 1 |
| 38. 1 | 39. 1 | 40. 1 | 41. 1 |
| 42. 1 | 43. 1 | 44. 1 | 45. 1 |
| 46. 1 | 47. 1 | 48. 1 | 49. 1 |
| 50. 1 | 51. 1 | 52. 1 | 53. 1 |
| 54. 1 | 55. 1 | 56. 1 | 57. 1 |
| 58. 1 | 59. 1 | 60. 1 | 61. 1 |
| 62. 1 | 63. 1 | 64. 1 | 65. 90099 |
| 66. 876, 867, 786, 768, 687, 978 | | 67. 1010, 1020 | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்




# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01) கீழே தரப்பட்டுள்ளவற்றை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான கூட்டத்தின் கீழ் கோடிடுக**

**01.**



A    B    C    D

(i) BC AD    (ii) AB CD    (iii) AC BD

**02.** கீழே உள்ள படங்கள் ஏதோ ஒரு விதத்திற்கேற்ப கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன அதில் சரியான கூட்டங்களாக பிரிக்கப்பட்ட விடையின் கீழ் கோடிடுக




A    B    C    D    E    F

(i) AE DF BC    (ii) AE BD CF    (iii) AB CD EF

**(02) 3ஆம், 4ஆம் வினாக்கள் ஆரம்பத்தில் தரப்பட்ட உருவுடன் பொருந்தக்கூடிய உரு எதுவெனக் கண்டு அதன்கீழ் கோடிடுக**

**03.**



(i)    (ii)    (iii)


**04.**



(i)    (ii)    (iii)


**(03) 5ஆம், 6ஆம் வினாக்களுக்கு வெற்றுக்கூட்டினுள் வரக்கூடிய அமைப்பின் கீழ் கோடிடுக**

**05.**



(i) (ii) (iii)

**06.**




(i) (ii) (iii)

**07.** படத்தில் காட்டியவாறு கடதாசியை மடித்து 3ஆவது நிலையில் வெட்டிய பின் கிடைக்கும் அமைப்பு யாது?



(i) (ii) (iii)

**08.** கீழே கடிதம் எழுதும் ஒழுங்கு மாறியுள்ளது அதனை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையின் கீழ் கோடிடுக




(i) C, E, A, B, D (ii) C, D, B, A, E (iii) E, C, B, D, A


**09.** கீழே பட்டம் ஒன்றைக் கட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நிகழ்வு தரப்பட்டுள்ளது அவற்றை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் அமைப்பின் கீழ் கோடிடுக




(i) C, D, A, B, E (ii) C, E, A, D, B (iii) B, D, A, E, C




**10.** புள்ளிக்கோட்டில் வரக்கூடிய சரியான பெறுமானம் யாதுவெனக் கண்டுபிடித்து அதன் கீழ் கோடிடுக.




(i) 2 (ii) 6 (iii) 8

**11.** கீழே புள்ளிக்கோட்டில் வரக்கூடிய விடையைக் கண்டுபிடித்து அதன் கீழ் கோடிடுக




(i) 2 (ii) 4 (iii) 6

**(04)** அடைப்புக்களில் இலக்கங்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன அதற்கேற்ப 12 - 14 வரையான வினாக்களுக்கு விடை தருக


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 3 | 4 | C | |
| 6 | 5 | | 2 | 5 | | 3 |
| | A | | 1 | 6 | 7 | 2 |
| | B | | 8 | | 8 | 1 |

**12.** எழுத்து A எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1) 6 2) 7 3) 8

**13.** எழுத்து B எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1) 9 2) 10 3) 11

**14.** எழுத்து C எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?
1) 4 2) 5 3) 6

**15.** கீழே தரப்பட்ட அமைப்பில் எத்தனை முக்கோணிகள் உள்ளது எனக்கண்டு கீறிடுக



1) 3 2) 6 3) 9

**16.** கீழே முதலில் தரப்பட்ட படஅமைப்பில் வெட்டி அகற்றப்பட்ட துண்டு யாதாக இருக்கும் எனக் கண்டு பிடித்துக் கீறிடுக



## திருமலையில் இம்முறை 2,56852 பேர் வாக்களிக்க முடியும்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் மூன்று தேர்தல் தொகுதிகளிலும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 2 இலட்சத்து 56 ஆயிரத்து 852 பேர் வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர எஸ்.டபிள்யூ. வெல்கம தெரிவித்தார்.

திருகோணமலை தேர்தல் தொகுதியில் 86,978 (86 ஆயிரத்து 978 பேரும்) மூதூர் தேர்தல் தொகுதியில் 95 ஆயிரத்து 804 பேரும் சேருவில தேர்தல் தொகுதியில் 74 ஆயிரத்து 70 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

# யாழ். தேர்தல் களம் கூட்டமைப்பு வேட்பாளர்கள் யார்?

## இதுவரை கசிந்த தகவல்கள்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ள கூட்டமைப்பின் வேட்பாளர்களில் உறுதியாகியுள்ள வேட்பாளர்களின் விபரம் வெளிவந்துள்ளது.

இவர்களில் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், சிவஞானம் சிறீதரன், அச்சுவேலியினை சேர்ந்த இராசேந்திரா ஆகியோர் தமிழரசுக் கட்சி சார்பில் இறக்கப்படவுள்ளனர்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்எப்), சிறிகாந்தா (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரின் இடங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. தென்மராட்சியில் அருந்தவபாலனா அல்லது ரவிராஜின் மனைவியா என கேள்வி வலுத்துள்ளது.

இதேவேளை சுரேஸ் பிரே மச்சந்திரன் தனது பட்டியலில வடமராட்சியினில் ஒருவரை களமிறகக முற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே போனஸ் ஆசனங்களுக்காக தேசியப்பட்டியலில பரிந்துரை செய்யப்படும் பெயர்களுக்கு மிகுந்த போட்டி நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியரும் பேரவை உறுப்பினரும் தமிழரசுகட்சியின் உபதலைவருமான பேரா.சிற்றம்பலத்திற்கு தேசியப்பட்டிலில் இடமளிக்குமாறு மாவை சேனாதிராஜாவை கோரும் கையெழுத்து வேட்டை நடைபெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேராசிரியர் சிற்றம்பலம் அவரகள் பல தடவை நாடாளுமன்ற தேர்தலில் களமிறங்க எண்ணிய போதும் அவருக்கு இடமளிக்கப்பட்டு இருக்கவில்லை. அவருடைய வெற்றி வாய்ப்பு குறைவாக இருந்தமையால் அவரை தமிழரசுக்கட்சி களமிறக்கி இருகக வில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அவர் இம்முறை தேசியப்பட்டியலில் உள்வருவதற்கான முயற்சியில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஜகத் ஜயசூரியவுக்கு அமெரிக்க விசா மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்க விசாவுக்காக விண்ணப்பித்திருந்த ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு விசா வழங்கப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அவரது மனைவிக்கு, இந்தவருடம் மே மாதம் அமெரிக்க விசா வழங்கப்பட்டுள்ளது. பிரத்தியேக விஜயமொன்றை மேற்கொண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி அமெரிக்காவுக்குச் செல்வதற்காக லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார். இதேவேளை, விசாவுக்காக அமெரிக்க தூதரகத்துக்கு அனுப்பப்பட்ட அவரது கடவுச்சீட்டு இன்னுமும் திரும்ப வழங்கப்படவில்லையெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்திய மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல்

### இந்திய ஊடகங்கள் தகவல்

தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் வேதாரண்யம் கடலோர பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செயதுள்ளனர்.

இந்திய ஊடகங்கள் இந்த தகவலை நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

கோடியக் கரைக்கு அருகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நாகப்பட்டினம் செருதூர் மீனவர்கள் மீதே இலங்கை மீனவர்கள் சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

மேலும் தமிழக மீனவர்களின் மீன்பிடி சாதனங்களையும் இலங்கை மீனவர்கள் சேதப்படுத்தியதோடு பொருட்களையும் பறித்துச் சென்றுள்ளதாகவும் தெரவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 20 படகுகளில் இருந்த 30 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட வேதாரண்யம் கடலோரக் காவல் நிலைய பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுவர் அபிவிருத்தி செயற்றிட்டம் உலகவங்கி நிதியுதவி

சிறுவர் விவகார அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள முன் பள்ளிச் சிறார் அபிவிருத்தி தொடரபான ஐந்தாண்டு கால வேலைத் திட்டத்திற்கு உலக வங்கி 50 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்க முன வந்துள்ளதாக சிறுவர் செயலகம் அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள முன்பள்ளிச் சிறார் அபிவிருத்தி வேலைத்திட்டமானது இலங்கையில் முதல் தடவையாக சிறுவர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள நீண்ட கால வேலைத்திட்டமாகும்.

நாட்டில் 17,020 சிறுவர் முன் பள்ளிப் பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் 29,300 ஆசிரியர்கள் கற்பிப்பதாகவும், இவற்றுள் 85 சதவீதமானவை அரச சார்பற்ற நிறுவனங்களால் நடாத்திச் செல்லப்படுபவையாக உள்ளதாகவும் ஆய்வொன்றின் மூலம கண்டறியப்பட்டுள்ளது.

உத்தேச ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் இப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுககான சேம நலன்கள் முன்னேற்றம் செய்யப்படவுள்ளதுடன், கல்வி கற்பிக்கும் ஆசிரியரகளுக்கும் தேவையான உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சிகளும் வழங்கப்படும்.

திட்டத்தின் முடிவில் சிறுவர் முன்பள்ளி பாடசாலைகளின் எண்ணிக்கை 20,000 ஆக அதிகரிக்கப்படுவதுடன், சிறார்களின் எண்ணிக்கை 1,50,000 ஆக அதிகரிக்கப்படும் எனவும் சிறுவர் செயலகம் அறிவித்துள்ளது.


## ஓய்வூதியர்களுக்கு விரைவில் இலத்திரனியல் அடையாள அட்டை

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள ஓய்வூதியக்காரர்களுக்காக இலத்திரனியல் அடையாள அட்டையினை ஓய்வூதிய திணைக்களம் ஜூன் மாதம் முதலாம் திகதி அறிமுகப்படுத்தியுள்ளதாக ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இவ் அடையாள அட்டையில் ஓய்வூதியம் பெறுபவர், அவரில் தங்கி வாழ்பவர்கள் பற்றிய தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இவ்வட்டையின் மூலம் உள்ளூர் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இலத்திரனியல் அடையாள அட்டையை தேர்தல் மற்றும் உத்தியோக நடவடிக்கைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட அடையாள. அட்டையாகவும் பயன்படுத்த முடியுமென ஓய்வூதிய திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. புதிய இலத்திரனியல் அடையாள அட்டை மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் நான்கு இலட்சம் ஓய்வூதியக்காரர்கள் நன்மை பெறுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அது எனக்கு தெரியாது



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயர் உள்ளடக்கப்பட்டிருப்பது தொடர்பில் தான் எதனையும் அறிந்திருக்கவில்லை எனவும், அது குறித்து தனக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் இவ்விவகாரம் தொடர்பில் உண்மை நிலைமைகளை அறிந்து கொண்டதன் பின்னரே எந்தக் கருத்தினையும் வெளியிட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட ஆலோசகர்களாக முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பூந்தோட்ட முகாமில் இன்னும் 50 பேர் மட்டுமே

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பில் அங்கத்துவம் வகித்த மற்றும் அவர்களுக்கு உதவியவர்கள் என கைது செய்யப்பட்டவர்களில் 50 பேரே தற்போது பூந்தோட்டம் புனர வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வருவதாக புனர்வாழ்வு அதிகாரி லெப்.கேணல் பீ.பீ.எச். பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். வவுனியா, பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொணட போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த மற்றும் அவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த பலர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சி கொடுத்து சமூகமயமாக்கல் வேலைத் திட்டத்தை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆரம்பித்தது. அவ்வாறு புனரவாழ்வு பெற்று 12,000 பேர் வரையில் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இங்கு பெற்ற பயிற்சிகளைக் கொண்டு பலர் சுயதொழில் மற்றும் மேசன், வயறிங் என தொழில் செய்து நல்ல வருமானத்தைப் பெறுகிறார்கள். ஒரு சிலர் பயிற்சி பெற்றும் அதனைப் பயன்படுத்தாது கூலிவேலை செய்து வருகிறார்கள். இங்கு பல வேறு தொழிற் பயிற்சிகளும், சப்பாத்து செய்தல் போன்ற சுய தொழில் பயிற்சியும் மொழிக் கற்கைகளும் வழங்கப்படுகின்றன. கடந்த காலங்களில் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்களில் 10 பேர் வரையிலானோரே மீண்டும் சிறைக்கு வந்தனர். ஏனையோர் சமூகத்தில் வாழ்கிறார்கள். அந்த வகையில் இந்த புனர்வாழ்வு பயிற்சி வெற்றியளித்துள்ளது. தற்போது ஒரு பெண் உட்பட 50 பேர் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர்.

அவர்களின் புனர்வாழ்வு காலமான ஒரு வருடம் முடிவடையும் போது அவர்கள் ஒவ்வொருவரும் சமூகத்துடன் இணைக்கப்படுவார்கள் எனத் தெரிவித்தார். இதேவேளை, கிளிநொச்சியைச் சேர்ந்த 6 கிராம அலுவலர்கள் புலிகளுடன் தொடர்புகளை முன்னர் பேணியவர்கள் எனக் கூறப்பட்டு புதிதாக புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை அதிபர்களுக்கு முதலாம் தர பதவியுயர்வு

(கொழும்பு)

அதிபர் சேவையின் புதிய திருத்தச் சட்டங்களின் படி 1626 அதிபர்களுக்கு முதலாம் தரத்துக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதிபர் சேவையில் 1, 2-I, 2-II, 3 என காணப்பட்ட தரம், புதிய மாற்றத்தின் படி 1, 2, 3, என மாற்றப்பட்டன. இதற்கேற்பவே இந்த பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# துனீஸியத்தாக்குதலின் எதிரொலி
# சரிகிறது சுற்றுலாத்தொழில் துறை

துனீஸியாவில் இஸ்லாமியவாத துப்பாக்கிதாரி ஒருவரால் முப்பதுக்கும் மேற்பட்ட பிரிட்டன் சுற்றுலாப்பயணிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வெளியேறுவதால் துனீஸிய சுற்றுலாத்துறை மாபெரும் சரிவை சந்திக்குமென அச்சம் எழுந்துள்ளது.

துனீஸியாவில் இஸ்லாமியவாத துப்பாக்கிதாரி ஒருவரால் ஒரு வாரத்துக்கு முன் கொல்லப்பட்ட முப்பத்தெட்டு பேருக்கு நினைவஞ்சலி செலுத்தும் விதமாக பிரிட்டனிலும் துனீஸியாவிலும் வெள்ளியன்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் மகாராணியும் அவர் கணவரும் இந்த நினைவஞ்சலிக்கு தலைமையேற்றனர்.

துனீஸிய சுற்றுலாக் கடற்கரை விடுதியை ஒட்டிய மணல் வெளியில் நடந்த இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள்.

பயங்கரம் அரங்கேறி ஒரு வாரம் ஆகியிருக்க, அதன் சுவடுகளாக கடற்கரையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட மலர்களும், சுவற்றில் காணப்படும் தோட்டா ஓட்டைகளும், சஞ்சலமடையவைக்கின்ற அமைதியுமாக காணப்பட்டது.

துனீஸியாவிலிருந்து ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகள் வெளியேறிக் கொண்டிருக்கும் பின்னணியில் இனி மேல் எத்தனை பேர் இங்கு வருவார்கள் என்றும் சொல்ல முடியாது.

ஆனால் சுற்றுலாப்பயணிகளில் சிலர் துனீஸியாவை விட்டு செல்லக்கூடாது என்றும் தெரிவிக்கிறார்கள். அப்படிச் செல்வதன் மூலம் பயங்கரவாதம் வெற்றி பெற அனுமதிக்கக் கூடாது என்பது அப்படியான சுற்றுலாப் பயணிகளின் வாதமாக இருக்கிறது.

“இங்கு வேலை பார்ப்பவர்களுக்காக நான் வருத்தப்படுகிறேன். நாம் இங்கிருந்து வெளியேறினால் அது அந்த துப்பாக்கிதாரிக்கு கிடைக்கின்ற வெற்றியாகிவிடும். நான் அதைச் செய்யவே மாட்டேன்” என்று பிபிசியிடம் தெரிவித்தார் பிரட்டனைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர்.

சுற்றுலாப்பயணிகளை சுட்டுக்கொன்ற துப்பாக்கிதாரி மட்டும் துனீஸியர் என்றில்லை, உயிரைப் பணயம் வைத்து பல சுற்றுலாப்பயணிகளைக் காப்பாற்றியவர்களும் துனீஸியர்கள்தான்.

அப்படியான ஒருவர் தன்னை பிபிசியிடம் அடையாளம் காட்ட விரும்பவில்லை ஆனால் துப்பாக்கிதாரியிடம் இருந்து பயணிகளை மீட்க மனித அரண் அமைத்தவர்களில் இவரும் ஒருவர். துப்பாக்கிதாரியைத் தடுத்த நிறுத்த முடியாமல் போனதே என்ற குற்றவுணர்வால் அவர் இன்னுங் கூட வாடுகிறார்.

“என்னால் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது. என்னால் முடிந்ததைச் செய்தேன். ஆனாலும் நிறைய பேர் பலியாகவே செய்தனர். பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் ரஷ்யா மற்றும் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் துனீஸியா வரவேண்டும் என கெஞ்சிக் கேட்டுக்கிறேன். பயங்கரவாதத்துக்கு வெற்றியைக் கொடுத்துவிடாதீர்கள்”, என்கிறார் அந்த பெயர்க்குறிப்பிட விரும்பாத ஒரு துனீஸியர்.

# லலித்மோடியை சந்திக்கவே இல்லை

(புதுடில்லி)

லலித்மோடியை எங்கள் குடும்பத்தில் யாரும் சந்தித்ததில்லை” என காங் துணைத் தலைவர் ராகுல் மறுத்துள்ளார்.

ஐபிஎல் மோசடி புகாரில் வெளிநாட்டில் தங்கியுள்ள முன்னாள் ஐபிஎல் தலைவர் லலித்மோடி, தினமும் ஒரு “குண்டை” தூக்கிப் போடுகிறார். ராகுல், அவரது சகோதரி பிரியங்கா, கணவர் வதேரா ஆகியோர் என்னை சந்தித்து பேசினர்” என கூறியிருந்தார்.

டுவிட்டரில் தொடர்ந்து அவர் கூறும்போது, “லண்டனில் ஒரு ஹோட்டலில் பிரியங்காவையும் வதேராவையும் சந்தித்து பேசினேன். அவர்களை நன்கு உபசரித்து அனுப்பினேன்” என்றெல்லாம் கூறியிருந்தார். இந்த தகவல், கட்சிக்குள் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதுகுறித்து, கூருத்து காங்கிரஸ் வட்டாரத்தில் கூறப்படுவதாவது: எந்த சூழ்நிலையில் லலித்மோடியை ராகுல், பிரியங்கா, வதேரா சந்தித்ததில்லை. அவரது விருந்தோம் பலையும் பெற்றதில்லை. லலித்மோடி சொன்னதில் எந்த அடிப்படை உண்மையும் இல்லை. இதை ராகுல் வன்மையாக மறுக்கிறார். இவ்வாறு கூறுகின்றனர்.



# எட்டு குழந்தைகளை கொன்று குவித்தார் இந்த தாய்



பிரான்ஸ் நாட்டில் அடுத்தடுத்து பிறந்த 8 குழந்தைகளையும் கொன்று, வீட்டிலும் தோட்டத்திலும் மறைத்து வைத்த கொடூரமான தாயாருக்கு அந்நாட்டு நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

Dominique Cottrez(51) என்ற பெண் பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் நாடுகளின் எல்லை அருகே உள்ள ஒரு தனிமையான வீட்டில் வசித்து வந்துள்ளார்.

தந்தையுடன் வசித்து வந்த அவருக்கு 1989ஆம் ஆண்டு முதல 2000ஆம் ஆண்டு வரை 8 குழந்தைகள் பிறந்துள்ளன.

ஆனால், குழந்தை பிறப்பது யாருக்கும் தெரியக்கூடாது என்பதால், அனைத்து குழந்தைகளையும் அவர் வீட்டில் உள்ள கழிவறையிலேயே பெற்றெடுத்துள்ளார்.

அதே போல், ஒவ்வொரு குழந்தை பிறந்த பின்னர், அவற்றை மூச்சடக்கி கொன்று, வீட்டுக்குள் உள்ள துணி துவைக்கும் இயந்திரத்திற்குள் மறைத்தும், வெளியே உள்ள பூந்தோட்டத்தில் புதைத்தும் வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 2010ஆம் ஆண்டு யூலை மாதம், அந்த வீட்டிற்கு புதிதாக நபர் ஒருவர் குடியேற, இந்தக் கொலை விவகாரம் ஒவ்வொன்றாக வெளியே தெரிய ஆரம்பித்துள்ளது.

வீட்டிற்குள் இருந்து 6 குழந்தைகளின் சடலங்களும், வெளியே தோட்டத்திலிருந்து இரண்டு சடலங்களையும் அந்த நபர் கண்டு பிடிக்க, பொலிஸார் அந்தப் பெண்ணை கைது செய்தனர்.

பிரான்ஸ் நாட்டையே உலுக்கிய இந்த பயங்கர சம்பவத்தில், கைது செய்யப்பட்ட தாயார் அதிரடியான வாக்குமூலம் ஒன்றை அளித்துள்ளார்.

அதாவது, தான் சிறுமியாக இருந்தபோதிலிருந்து தனது தந்தையுடன் தகாத உறவு இருந்தது என்றும் அந்த உறவின் விளைவாக தான் இந்த 8 குழந்தைகளும் பிறந்தது.

கடந்த 2007ஆம் ஆண்டு தனது தந்தை இறக்கும் வரையில், அவருடன் தகாத உறவு வைத்திருந்ததாகவும், இது வெளியே தெரிந்தால் அவமானமாக போய் விடும் என்பதால் தான் 8 குழந்தைகளையும் கொன்றதாக கூறியுள்ளார்.


ஆனால், இந்த வாக்குமூலத்தை ஏற்காத நீதிமன்றம், குழந்தைகளுக்கு மரபணு சோதனை நடத்த சில வருடங்களுக்கு முன்னர் உத்தரவிட்டது.

அந்த மரபணு பரிசோதனையில், கொலை செய்யப்பட்ட அனைத்து குழந்தைகளும் அந்த பெண்ணின் கணவரான Pierre-Marie Cottrez என்பவர் மூலம் தான் பிறந்தன என்பது நிரூபிக்கப்பட்டது.

குழந்தைகளை திட்டம் போட்டு கொன்று விட்டு அதனை மறைக்க தனது தந்தை மீது பழியை சுமத்தியது நிரூபணம் ஆகியுள்ளதாக நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

இந்த வழக்கு தொடர்பான இறுதி விசாரணை பிரான்ஸ் நாட்டில் உள்ள நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வந்தபோது, குற்றவாளியான தாயாருக்கு 9 வருடங்கள் சிறை தண்டனை விதிப்பதாக நீதிபதி தீர்ப்பளித்து உத்தரவிட்டுள்ளார்.

# துக்ளக் ஆசிரியர் மருத்துவ மனையில்



துக்ளக் ஆசிரியர் சோ நேற்று முன்தினம் இரவு திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டார். அவருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது.

இதையடுத்து அவர் கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். “சோ” குடும்பத்தினர் அருகில் இருந்து கவனித்து வருகின்றனர்.

# வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி



நடிகை ரம்பா தமிழ்ப்பட உலகில் 1990 மற்றும் 2000களில் முன்னணி கதாநாயகியாக இருந்தார். தெலுங்கு, கன்னட படங்களிலும் நடித்தார். கடந்த 2010ஆம் ஆண்டு ஏப்ரலில் கனடாவில் தொழில் அதிபராக உள்ள இந்திரன் பத்மநாதனை மணந்து கொண்டார். திருமணத்துக்கு பிறகு அவர் நடிக்கவில்லை. சினிமா வுக்கு முழுக்குப் போட்டார். கணவருடனேயே கனடாவில் தங்கி விட்டார்.

ரம்பாவுக்கு 2011 இல் பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு லாண்யா என பெயரிட்டனர். அதன் பிறகு இரண்டாவது தடவையாக கர்ப்பமாக இருந்தார். கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி அவருக்கு மீண்டும் பெண் குழந்தை பிறந்தது.

ரம்பாவுக்கும் கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக வதந்திகளும் வெளிவந்தன. அந்த வதந்திகளில் உண்மை இல்லை என்று ரம்பா தரப்பில் மறுக்கப்பட்டது. அதை நிரூபிக்கும் விதமாக ஒற்றுமையாக இருக்கும் குடும்பப் படமும் இப்போது வெளிவந்

உலகச் செய்திகள்




# இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் உரிமை கோரியது ஐ.எஸ்.

இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களுக்கு எகிப்தின் சினாய் பிராந்தியத்தில் இயங்கும் ஐ.எஸ் ஆயுததாரிகளின் கிளைப் பிரிவொன்று உரிமை கோரியுள்ளது.

எகிப்து இராணுவத்திற்கு இஸ்ரேல் ஒத்துழைப்பு வழங்குவதற்கு பதிலளிக்கும் வகையில் இந்த தாக்குதலை நடத்தியதாக அறிக்க கிளை அமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டின் தென்பிராந்தியத்தில் இரண்டு ரொக்கெட்டுக்கள் வீழ்ந்து வெடித்த போதிலும் எந்தவொரு இழப்புக்களும் ஏற்படவில்லை என இஸ்ரேல் கூறியுள்ளது.

சினாய்ப் பிராந்தியத்தின் வட பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோதல்களில் எகிப்து படையினர் 17 பேர் வரையும் ஐ.எஸ். ஆயுததாரிகள் 100 பேர் வரையும் கொல்லப்பட்டிருந்தனர்.

ஷேய்க் சுவைய்ட் நகரில் ஐ.எஸ். ஆயுததாரிகளால் பாரிய அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதலாக இது பதிவாகியிருந்தது.

இதனிடையே சினாய்ப் பிராந்தியத்தில் செயற்படும் ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு ஹமாஸ் இயக்கம் உதவி வழங்குவதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பரீட்சைக் காலத்தில் தேர்தல் ஆசிரிய சங்கங்கள் கடும் எதிர்ப்பு

க.பொ.த உயர்தர பரீட்சைக் காலத்தில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதற்கு ஆசிரியர் தொழிற்சங்கங்களிடமிருந்து எதிர்ப்பும் கண்டனமும் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதியை தீர்மானிக்கும் இந்தப் பரீட்சைக் காலத்தில் தேர்தல் நடைபெறுவது மாணவர்களை பாதிக்கும் செயல் என்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகஸ்ட் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான காலம் என்று தெரிந்திருந்தும் தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் கூறுகின்றது.

தேர்தல் ஆரவாரம், வீடுகளிலும் அயலிலும் தேர்தல் கால அரசியல் பேசும் சூழல் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களை பாதிப்பதாக அமையும் என்பதால், பரீட்சைக் காலத்தில் தேர்தலை நடத்த வேண்டாம் என்று தமது சங்கம் வலியுறுத்துவதாக கூறுகின்றார் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் தலைவரான லால் குமார.

முன்னைய அரசாங்கத்தைப் போன்று தான் தற்போதைய அரசாங்கமும் மாணவர்களின் நலன்களை கருத்தில் கொள்ளாமல் சோதிடர்களின் ஆலோசனைகளை பெற்று தேர்தலுக்கான திகதியை தீர்மானிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் கூறுகின்றது.

ஒரே தடவையில் தொடர்ந்து நடைபெற வேண்டிய உயர்தர பரீட்சை இம்முறை வழமைக்கு மாறாக இரு கட்டங்களாக நடைபெறுவதையும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரான ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டுகின்றார்.

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றம் கலைப்பு மற்றும் தேர்தல் தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியுடன் தொடர்புடையது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளரான எம்.எம்.மொகமட் தெரிவித்தார்.

# வாகன விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் நாவற்குழி - செம்மணிப் பகுதியில் யாழ். வரவு வளைவுக்கருகாமையில் ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிளும், எல்வ் ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வடக்கு மிருசுவில், மிருசுவிலைச் சேர்ந்த அன்ரனி ராஜ் டென்சில்பெனோ (வயது - 26) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இவருடன் வந்த கொடிகாமத்தைச் சேர்ந்த சண்முகநாதன் உதயகுமார் (வயது - 46) என்ற 4 பிள்ளைகளின் தந்தை கால் ஒன்றை இழந்த நிலையில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். போதனாவில் காயமடைந்த குடும்பஸ்தர் நேற்று கண் கிளினிற்கிற்கு வந்த வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துக் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# மகிந்தவின் பிரவேசத்தால் சிறுகட்சிகளுக்கு அழுத்தம்

## என்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் அனுமதி வழங்கப்பட்டமையினால் சிறு கட்சிகளுக்கு அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த புதிய அரசியல் நிலைவரத்தின் முன்னால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமது நிலைப்பாடு என்னவென் பது குறித்து அடுத்து வரும் ஓரிரு நாட்களில் உத்தியோகபூர்வ அறிவிப்பொன்றை செய்யவுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய கட்சி நேற்று அறிவித்துள்ளது.

### தொகுதிப்...

அனைத்து உறுப்பினர்களையும் ஒன்றுசேர்த்து நேற்று கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் அது நாளை வரை பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணிப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு கிளி. பன்னங்கண்டி மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பன்னங்கண்டி கிராமத்திலுள்ள குடும்பங்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத்தந்து, தமக்கான வீட்டுத்திட்டங்கள் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள பன்னங்கண்டி கிராமத்தில் ஏற்கனவே மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தனியாருக்கு சொந்தமான இரு பயிர்ச் செய்கை காணிகளில் தற்போது 295 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

மத்திய வகுப்பு திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட பசுபதி கமம், சரஸ்வதி கமம், ஆகிய இரு காணிகளும் அதன் முன்னைய உரிமையாளர்கள் குடியிருப்பதற்கோ அல்லது நாட்டின் உணவு உற்பத்திக்கு பங்களிப்பு செய்யவோ இல்லை.

இந்நிலையில் கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாக பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து இடம்பெயர்ந்த மிகவும் வறிய மக்கள் குறித்த காணிகளில் குடியேறினர்.

இவ்வாறு குறித்த குடும்பங்கள் 2009 ஆம் ஆண்டு மீள்குடியமர்வின் பின்னர், மீள்குடியமர்ந்து தற்போது ஐந்து வருடங்களாகியும் இவர்களுக்கான காணி உரிமம் இல்லாமையால் நிரந்தர வீட்டுத்திட்டங்களோ அல்லது ஏனைய அடிப்படை வசதிகளோ இல்லாத நிலையில் ஆறு மாதத்திற்கென வழங்கப்பட்ட தற்காலிக வீடுகளிலும் தகரக் கொட்டகைகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு தகரக் கொட்டகைகளில் எந்த ஒரு அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருவதுடன் குழந்தைகள், சிறுவர்கள், வெப்பம் காரணமாக தோல் நோய்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட வறுமை கோட்டின் கீழுள்ள, தமது நிலையினைக் கருத்திற்கொண்டு தமது காணி உரிமம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து தமக்கான வீட்டுத் திட்டங்களைப் பெற்றுத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச செயலரிடம் வினவிய போது, ஏற்கனவே வழங்கப்பட்ட காணிகளை தற்போது மீளப்பெற்று இம்மக்களுக்கு வழங்க முடியாது. இவ்விடயத்தை மாகாண காணி அமைச்சருக்கும் காணி ஆணையாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

விசேட திட்டத்தின் மூலம் அக்காணியை மீள சுவீகரித்து இம்மக்களுக்கு வழங்க முடியுமா என்பது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம் எனத் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில இக்குடும்பங்களில் 100 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட இருந்த போதும் அவர்கள் வறுமை காரணமாக வீட்டுத்திட்டத்தை ஏற்க மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கஞ்சாவுடன்...

அவர்கள் நிற்காமல் தப்பிச் சென்றவேளை பொலிஸார் அவர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இதில் இளைஞரில் ஒருவர் தப்பிச் சென்றுள்ளதுடன், மற்றையவர் பிடிபட்டார். அவரிடமிருந்து கஞ்சா பொதி கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இவ்விளைஞர் தாவடிப் பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினமும் தாவடிப் பிள்ளையார் கோவில் பகுதியில் போதை லேகிய விற்பனையில் ஈடுபட்ட நபரை சுன்னாகம் பொலிஸார் கைதுசெய்ததுடன், 20 லேகிய உருண்டைகளையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

### மைத்திரி...

இழைத்துள்ளதுடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 6.2 மில்லியன் வாக்காளர்களுக்கு துரோகம் இழைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தையும் பதவிகளையும் தக்க வைத்துக்கொள்வதில் அதிக சிரத்தைக் காட்டி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

மறு புறத்தில் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள மகிந்த மைத்திரியுடன் இணைந்து கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மைத்திரி மகிந்த ஒற்றுமை தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் அடிப்படையிலானதே தவிர, நாட்டு மக்களினதோ அல்லது வாக்காளர்களினதோ நன்மைக்காக அல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

### குற்றம்...

வீரபத்திரன், சங்கரன் கந்தசாமி, சிவநாதன் தவமணி, கந்தசாமி பூரணம் ஆகியோர் மீது சட்ட மா அதிபரினால் குற்றச்சாட்டப் பட்டிருந்தது. வழக்கு விசாரணையின்போது முதலாம், 4 ஆம், 7 ஆம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, சட்டத்தரணி ஷர்மினி விக்னேஸ்வரனின் அனுசரணையுடன் ஆஜரானார். ஏனைய எதிரிக ளின் சார்பில் சட்டத்தரணி பா.தவபாலன் ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டவாதி நளினி சயாகரன் ஆஜரானார்.

இரவு .8.00 மணியளவில் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்ட கொலைச் சம்பவங்களை நேரில் கண்ட சாட்சிகளாக இறந்த றசீகரனின் மனைவி செல்வசாந்தி மற்றும் ஒன்றுவிட்ட சகோதரி பொன் னுசாமி அனுஷா ஆகியோரின் சாட்சியம் வழக்கு தொடுநர் தரப்பில் முன்வைக்கப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கைகளை சமர்ப்பித்து சட்ட வைத்திய அதிகாரி கே.ரட்ணசிங்கம் சாட்சியமளித்தார். கொலைகள் தொடர்பான புலன் விசாரணைகளுக்குப் பொறுப்பாக இருந்த அப்போதைய பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் மேத்தானந்தாவும் சாட்சியமளித்தார்.

தீர்ப்புக்காக வழக்கு நேற்று முன்தினம் வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட போது விசாரணைகளின் மூலம் நியாயமான அளவு சந்தேகத்துக்கப்பால் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்து எதிரிகளை நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (137)

### கடற்படை...

காணிகள் கடற்படையினரினால் .கைப்பற்றப்பட்டு அவர்களின் வசம் இருந்து வந்தன.

நேற்றுக் காலை கடற்படையினரால் குறிப்பிட்ட பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளதாக வலி. வடக்கு பிரதேச செயலாளர் க்.ஸ்ரீ மோகனன் மற்றும் வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோமசுந்தரம் சுகிர்தன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து உடனடியாக குறிப்பிட்ட பகுதிக்குச் சென்ற பிரதேச செயலாளரும் பிரதேச சபைத் தலைவரும் மக்கள் மீள் குடியேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

உள்ளூராட்சி அமைச்சினால் வலி. வடக்கு பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் பற்றைகளை துப்புரவு செய்யும் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஐ.தே.க.வில்...

அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட எஸ்.பி.நாவின்ன நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து உரையாடிய எஸ்.பி.நாவின்ன அதன் பின்னர் கட்சியில் இணைந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### 62 இலட்சம்...

திட்டத்தின் போது கொள்கைவகுப்பு மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுசில் பிரேமஜயந்தவின் வீட்டில் சூழ்ச்சியொன்று இடம்பெற்றுள்ளமை குறித்து முழு நாட்டு மக்களும் அறிவார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அச்சுறுத்தி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வேட்பாளராக களமிறக்க வேண்டும் என சுசில் கூறுகின்றார்.

மைத்திரிபால சிறிசேனவைத் தோற்கடிப்பதற்காக காலை முதல் இரவு வரை அவர் பணியாற்றுகின்றார். மைத்திரிபால சிறிசேனவிற்காக வாக்களித்த 62 இலட்சம் மக்களுக்கு மைத்திரிபால சிறிசேன தீங்கு விளைவிக்க மாட்டார் என நான் இன்னும் நம்புகின்றேன். அவர் மீது நான் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளேன் எனத் தெரிவித்தார்.

### பாடசாலை...

ஞர்கள் குறித்த பாடசாலை மாணவனை மடக்கிப் பிடித்து ஆட்டோவில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

ஆட்டோவின் இலக்கத்தை அவதானித்த மாணவனின் நண்பர்கள் பாடசாலை அதிபருக்கு தெரிவித்துள்ளனர். பாடசாலை அதிபர் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பிரகாரம், ஆட்டோவை பொலிஸார் மடக்கிப் பிடித்து மாணவனை மீட்டுள்ளனர்.

ஆட்டோ சாரதியிடம் விசாரணை மேற்கொண்ட போது, குறித்த நபர் மணியந் தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் வாடகைக்கு ஆட்டோவை ஒகண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட மூவரையும் ஆட்டோ சாரதியையும் யாழ்ப்பாணம் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டனர். அந்த விசாரணையின் பின்னர் 3 இளைஞர்களையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளதுடன், நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# மகிந்தவின் பிரவேசத்தை அடுத்து தீவிரமடைந்துள்ள வன்முறைகள்

## கபே குற்றச்சாட்டு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் தீவிமடைந்துள்ளதாக கபே எனப்படும் நியாயமானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு போட்டியி டுவதற்கான வேட்புமனு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிற்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவித்து சில மணி நேரத்தில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக கபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 12 மணித்தியாலத்திற்குள் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் மாத்திரம் 6 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன் பல இடங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் பிரசார பதாதைககள் மற்றும் கொடிகள் என்பன சேதமாக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் போட்டியிட வேட்புமனு வழங்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்த அறிக்கையொன்றை வெளியிட்டு உறுதிப்படுத்தியுள்ள நிலையில் இந்த வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

லுனுகம்வெகர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பெரலிகெல வலயத்தில் அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் ஆதரவாளர்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கபே அமைப்பு கூறியுள்ளது.

எல்லகெல பிரதேசத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த பதாகை சேதமாக்கப்பட்டுள்ளது.

தங்கல்ல பிரதேசத்தில் இருந்த ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் நிழற்படங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக கபே அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியை இலக்கு வைத்து இந்த வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென் னக்கோன் வெளியிட்டுள்ள குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த வன்முறைகளை தேர்தல ஆணையாளரும் பொலிஸாரும் கட்டுப்படுத்தாவிடின் இந்த தேர்தல் வன்முறைகள் நிறைந்த ஒன்றாகவே அமையும் கீர்த்தி தென்னக்கோன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஒருவார காலத்திற்கு பேரணிகளுக்கு தடை



(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் கடைசி தினத்தில் பேரணிகளையோ, ஊர்வலங்களையோ நடத்த முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பொலிஸாரின் உத்தரவையும் மீறி பேரணி செல்வது சட்ட விரோதமான ஒரு செயலாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவ்வுத்தரவை மீறி வேட்பு மனுவை தாக்கல் செய்யும் கடைசித் தினத்தில் அதாவது 13ஆம் திகதி பேரணிகளை நடத்துபவருக்கு எதிராக பாராபட்சம் பார்க்காமல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி முதல 13ஆம் திகதி வரையில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வேட்பு மனு தாக்கல் செய்யும் இறுதி தினத்தில் இருந்து ஒரு வாரகாலத்திற்கு ஊர்வலங்கள், பேரணிகள், கூட்டங்கள் எதனையும் நடத்தக் கூடாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் வழங்கிய ஆணையை மீறேன் என்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மக்களினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தையும் அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் பாதுகாப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையை மதிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாத்தறையில் இருந்து அம்பாந்தோட்டை வரையான அதிவேகப் பாதையை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை கலந்து கொண்டார்.

அங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மீண்டும் நாட்டில் குடும்ப ஆட்சி ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன் என்றும் இலஞ்சம், ஊழல், மோசடிகள் அற்ற நல்லாட்சியை நாட்டில் ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி என்ற வகையிலும், சுதந்திரக் கட்சியின் தலைவன் என்ற வகையிலும் எந்த முடிவெடுத்தாலும் ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் வழங்கிய தீர்ப்பினை பாதிக்காத வகையிலேயே எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொது மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அவர்கள் வழங்கிய அதிகாரத்தையும் மீறமாட்டேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# ராஜிவ் கொலையாளிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## இந்திய உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி தெரிவிப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையாளிகள் 24 வருடங்கள் சிறைத் தண்டனை அனுபவித்து விட்ட நிலையில், அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும் என்று இந்திய உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகப் பேரவையின் தலைவராகவும் முன்னர் பதவி வகித்திருந்த நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு அடிக்கடி சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வருபவர்.

அவர், Satyam Bruyat என்ற தனது வலைத்தளத்தில், ராஜீவ் கொலையாளிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பதிவொன்றை இட்டுள்ளார்.

அவர் தனது பதிவில்,

ராஜீவ்காந்தி கொலையாளிகள் 24 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டனர். அவர்களுக்கு பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட



வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

அதுபோல, ஹைதராபாத் சிறையில் உள்ள அப்புதல் காதர், திஹார் சிறையில் உள்ள தேவிந்தர் பால் சிங் புல்லர், யேரவாடா சிறையில் உள்ள சைபுநிஷா குவாசி, ஆகியோரையும் பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்க வேண்டும்.

இவர்களுக்கு பொதுமன்னிப்பு அளிப்பது குறித்து ஏற்கனவே வேண்டுகோள் முன் வைத்துள்ளேன். நான் படுகொலையை நியாயப்படுத்தவில்லை.


ஆனால், இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதற்கு ராஜீவுக்கு என்ன வேலை இருந்தது அதன் காரணமாவே ஆயிரக்கணக்கான தமிழர்களும், 3000 எமது படைவீரர்களும் மரணமாகினர்.

இது தமிழர்கள் மத்தியில் ஒரு வலிமையான எதிர்ப்புணர்வை ஏற்படுத்தாமலா போகும்? 1984இல் தனது தாயின் படுகொலைக்குப் பின்னர், ராஜீவ்காந்தியின் உத்தரவின் பேரில் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அப்போது ராஜீவ் கூறிய கருத்துக்கள் அவரை ஒரு கிரிமினலாக காட்டியது. என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மைத்திரி-மகிந்த இணைந்தால் அரசியலிலிருந்து விலகிவிடுவேன்

## ஊவா முதல்வர்



மைத்திரிபால சிறிசேனவும் மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்தால், அரசியலிலிருந்து விலகிக் கொள்வதாக தான் செய்த அறிவிப்பில் இதுவரை எந்த மாற்றமும் இல்லையென ஊவா மாகாண முதலமைச்சர் ஹரீன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை அறிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளராக ஜனாதிபதி மைத்திரிபால அனுமதி வழங்கியதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த வெளியிட்ட அறிவிப்பில் தனக்கு சந்தேகம் இருப்பதாகவும் ஊவா முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் அனுமதி வழங்கப்பட்டதாக வெளியிடப்பட்ட தீர்மானத்தையடுத்து மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த 62 இலட்சம் வாக்காளர்களும் விரக்தியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எது எப்படிப் போனாலும், ஜனாதிபதி இது தொடர்பில் தெளிவான அறிவிப்பொன்றை விடுக்காதிருப்பதனால், தான் அந்த செய்தியை நம்பத் தயாரில்லையெனவும் அவர் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

# ரணிலின் அரசியல் ஜாதகத்தில் தோசம் என்கிறார் டளஸ்

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் ஜாதகத்தில் தோஷம் இருப்பதாக முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதனாலேயே அவர் மூன்று தடவைகள் பிரதமரானபோதும், இரண்டு வருடங்களுக்கு மேல் பிரதமராக நீடித்ததில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கான வேட்பு மனு குறித்து அறிவிப்பதற்காக நாராஹென்பிடியவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திபில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் பதிலளிக்கையில்,

தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் மையத்தில் பல தோஷங்கள் இருக்கின்றன. அவர் பிரதமராக நியமிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பத்தின் போது அவருக்கு ஒரு வருடமே அந்த பதவியில் நீடிக்க முடிந்தது. அதேபோல் இரண்டாவது தடவையாக பிரதமரானபோது அவருக்கு இரண்டு ஆண்டுகள் மாத்திரமே பதவியில் நீடிக்க முடிந்தது.

அத்துடன் மூன்றாது தடவையாக பிரதமரானார். இலங்கையில் மூன்றாவது தடவையும் பிரதமரான இரண்டாவது நபர் இவராவர். இவ்வாறு மூன்றாவது தடவையாகவும் பிரதமரான ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆட்சியமைக்க கிடைக்கும் காலம் வெறுமனே 6 மாதங்கள் மாத்திரமேயாகும். இதுதான் உண்மை.

இது ஒரு சாதாரண முடிவோ, ரணில் தரப்பினருக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு திருப்தியான முடிவோ அல்ல. இன்றிலிருந்து தேர்தலுக்கு இன்னும் 44 நாட்கள் உள்ளன. இதன் போது நாம் கண்டிராத வகையில பல்வேறான குற்றச்சாட்டுக்கள், பல்வேறான விமர்சனங்கள் என்பன வெளியிடப்படும்.

எனினும் இந்த நாட்டு மக்கள் புத்தியுள்ளவர்கள் என்று நாம் நம்புகின்றோம். என்றும் கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.